தென்மொழி

சுவடி 28
ஓலை 7

விலை :
உருபா 4–00

தேசிய இனங்களின்
உரிமைகொள் ஆளுமை!

எற்றைக் கும்மினி எழாத படியாய்
ஒற்றைக் கட்சியின் ஆட்சியொழிய
இந்திய அரசெனில் பேராய மேயெனும்
முந்தைய நிலைமை முங்கி மறைந்தது!
மாநிலங் களிலும் நடுவண் அரசிலும்
மீநிலை பெற்றன பற்பல கட்சிகள்!
தலைமை யமைச்சரைத் தருகின்ற
நிலையது உத்திரப் பைதிரமே
என்னும் நிலைமையும் இல்லையாய்ப் போனது
இன்னுஞ் சற்றே எண்ணிப் பார்ப்பின்
ஆளப் பிறந்தவர் வடவரே என்னும்
நீளப் பேச்சுக்கும் இடமிலா தொழிந்தது!
அனைத்திந் தியக் கட்சிக் கொள்கைகள் என்பன
எனைத்தும் உருப்படி யாகா நிலைமையால்
மக்கள் சாய்கால் பெற்றுச் சிறக்கத்
தக்கன மாநிலக் கட்சிகளாயின!
காசுமீரம் ஒருவாறு கைவிட்டுப் போனதே!
பேசப் புகுந்தால் பஞ்சாபும் அன்னதே!
துணைக் கண்டத்துத் தேசிய இனங்கள்
பணைக்கும் பற்பல உரிமையின் ஓங்கி
ஆளுமை புரியும் நாளுநண் ணியதே!

- இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. உ0உஎ : கடகம் 1996 சூலை

என்றைக்கு எழுவாயோ?

இந்நொடியே எழாமல், நீ எந்நொடியில்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எந்நொடியும் செந்தமிழை வீழ்த்துதற்கே
எதிர்பார்க்கும் ஆரி யத்தை
அந்நொடியே இடுப்பொடிக்கும் மொழிவல்லார்
தேவநேயப் பாவா ணர்போல்
இந்நிலத்து வேறொருவர் இனிவந்தா
ஆய்ந்துண்மை எடுத்துச் சொல்வார்?

இதுநேரம் எழாமல், நீ எது நேரந்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
எதுநேரம் எந்தமிழர் ஆட்சியினை
இருட்டடிக்க - என்றே பார்ப்பான்
அதுநேரம் பார்த்திருக்க, அயர்வின்றி
உழைக்கின்ற அருட்செல் வர்போல்
எதுநேரும் என்றாலும் இளைக்காத
நெஞ்சொன்றா இனிமேல் கிட்டும்?

இன்றைக்கே நீ யெழுதல் இல்லையெனில்
இனியடுத்து வரப்போ கின்ற
என்றைக்கும் தமிழா, நீ எழப்போதல்
இல்லையென எண்ணிக் கொள்வாய்!
அன்றைக்குப் போனதடா நின்னுரிமை;
நின்பெருமை; அனைத்து வாழ்வும்!
என்றைக்குச் சிறப்பாயோ? நந்தமிழ்த்தாய்க்
குலகநிலை ஏற்று வாயோ?

ஆசிரியர் இல்ல முகவரி

திருவாட்டி. தாமரை பெருஞ்சித்திரனார்.
சி.கே. அடுக்குமாடி இல்லம். (G.K. Flats)
காயிதே மில்லத் கல்லூரி எதிரில்,
வேளச்சேரி சாலை, மேடவாக்கம். சென்னை - 601302.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி : 28) தி.பி.உ0உஎ - கடகம் (ஆகத்து - '96) (ஓலை - 7

அயல் எழுத்துகள்

தமிழ் நெடுங்கணக்கில் சில எழுத்துகளைக் கூட்ட வேண்டும் என்றும் சில எழுத்துகளைக் குறைக்க வேண்டும் என்றும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரிவடிவங்கள் சிலவற்றைப் பண்டை நிலைக்கு மாற்றியமைத்ததைத் தொடர்ந்து மேலுஞ் சிலவற்றைப் புதுமுறையில் மாற்ற வேண்டும் என்றும் நெடுங்கணக்கையே விட்டொழித்து ஆங்கிலத் தைப் போல உயிரும் மெய்யும் என்னும் முதலெழுத்தான குறுங்கணக் களவிலேயே அதனைக் குறுக்கிவிட வேண்டும் என்றும் சிற்சிலர் கருத்து ரைத்து முயன்று வருகின்றனர்.

கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்பு உள்ளிட்ட வாழ்வியல் நிலைகளிலும் தமிழ் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு, அடுத்தடுத்த தலைமுறைகளை எண்ணுங்கால் தமிழின்நிலை வினாக்குறியாகி நிற்கும் இற்றைநிலையில், அந் நலிவு நீக்கி அனைத்துத் துறையிலும் அதன் ஆளுமையை வளர்த்து வலுப்படுத்தும் முயற்சியே தலையாயது என்றாலும் நெடுங்கணக்கில் மாற்றங் காணாவிட்டால் தமிழில் அறிவியல் வளர்ச்சி தடைப்பட நேரும் என்று கூறப்படுவதால் அது பற்றியும் நாம் கருத்துச் செலுத்துவது கட்டாயமாக உள்ளது.

கடந்த பல நூற்றாண்டுகளாகத் தமிழிற் கலந்து வழங்கினும் தமிழின் இயல்பால் பொது மக்களிடையே கலக்க வியலாமலும் புலமக் களால் விலக்கப்பட்டும் ஒட்டியும் ஒட்டாமலும் நிற்கும் கிரந்த எழுத்து களைத் தமிழ் எழுத்துகளாகவே ஏற்று வழங்க வேண்டும் என்னுங் கருத்து இப்போது சற்றே வலுப்பெற்று வருகின்றது. ஆகவே, முதற்கண் இது பற்றி ஆய்ந்து ஒரு முடிவு செய்து கொள்வது நன்று.

வடமொழிச் சொற்களைத் தமிழில் கலந்து வழங்க முற்பட்ட இடைக்காலத்தவர்கள் சிலர்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே!"

என்னும் தொல்லாணை நல்லாசிரியர்தம் இலக்கண நெறிக்குக் கட்டுப் படாமல் வடமொழி ஒலியெழுத்துகளை அம்மொழியின் ஒலிப்படி யேதான் ஒலிக்க வேண்டும், மந்திரங்கள் அவ்வொலிப்படியே ஒலித்தால் தான் ஆற்றலுடையனவாகும் என்னும் மதங்கொண்டு தமிழில் கிரந்த எழுத்துகளைப் புகுத்தலாயினர். இவ்வாறு இவற்றைப் படைத்தவர்களும் புகுத்தியவர்களும் இலக்கண ஆசிரியர்களோ, மொழிவல்லுநர்களோ அல்லர்.

இஃது ஒரு குழூஉக்குறிபோல் வழங்கப்பட்டு வந்ததேயன்றிப் பெருவாரியான மக்களிடையே இவ்வெழுத்துகள் சாய்கால் பெறவில்லை. ஓரளவு அது சாய்கால் பெற்றுத் தலைதூக்கிய போது தமிழறிஞர் பெருமக்கள் அதனை அடக்கியே வைத்திருந்தனர்.

இன்று அறிவியல் வளர்ச்சி, கலைச் சொற்கள் என்னும் பெயரில் பிறமொழிச் சொற்களை அவ்வம்மொழி யொலிப்படியே வழங்காவிடின் குழப்பம் நேருமென்று கூறி, அதனைத் தவிர்த்தற்கு ஸ்ரீ என்னும் தனிநிலையோடு ஹ, ஸ, ஷ, ஜ, க்ஷ, என்னும் ஐந்து எழுத்துகளைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று ஏடலுரைக்கின்றனர் சிலர். எத்துறை நூல்களாயினும் பிறமொழிகளினின்றும் தமிழில் பெயர்க்கப்படுங்கால் பிறமொழிச் சொற்கள் அனைத்தும் தமிழ்ப்படுத்தப் படுதலே வேண்டும். பிறமொழிச் சொற்களைத் தமிழிற் கலத்தலாகாது என்பதில் நம்மைப் பொறுத்தவரை இரண்டு கருத்துக்கிடமே யில்லை. ஆயினும் மக்கட் பெயரும் இடப்பெயருமான தனிச் சிறப்புப் பெயர்களை ஒலிபெயர்த்தல் குறித்தே இதனை நாம் எழுதுகிறோம்.

உலகில் உள்ள எந்த ஒரு மொழியிலும் மற்றைய அனைத்து மொழி களின் ஒலியையும் முழு அளவில் ஒலிக்கவே முடியாது. அவ்வம் மொழிக்குரிய தனித் தன்மை வாய்ந்த ஒலிகளையும் தம் மொழியில் ஒலித்திரிபு செய்தேயாகல் வேண்டும்.

மேற்கூறிய ஐந்து கிரந்த எழுத்துகளைச் சேர்த்துக் கொண்டாலும்

வடமொழியைக்கூட முழுமையாகத் தமிழில் ஒலித்துவிட முடியாது. எடுத்துக் காட்டாக 'கனபாடிகள்' (Gana Baadigal) என்ற சொல் வடமொழியில் ஒலிப்பது போலவே தமிழில் ஒலிப்பதற்கு இவ்வெழுத் துகள் பயன்பட மாட்டா. (இங்குக் குறிக்கப்படும் கனம் பருப்பொருளில் எடையையும் நுண்பொருளில் பெருமையையும் குறிக்கும் தமிழ்க் கனமன்று)

இவ்வாறே வடமொழியில் ஒன்றுக்கு நான்காகப் பெருகியுள்ள எழுத்துகளாலான சொற்கள் அனைத்தையும் இவ் வைந்து எழுத்து களை மட்டுமே கொண்டு எழுதிவிட முடியாது. வடமொழி முழுமைக்கும் கிரந்த எழுத்துகள் உண்டு. தேவையான விடத்து அவ்வெழுத்துகளையெல்லாம் கலந்து வழங்கலாம் என்பாரை எவ்வாறு மறுக்கவியலும். எனவே அது வரம்பின்றி நீளும்.

இக் கிரந்த எழுத்துகள் வடமொழி யொன்றையே நோக்கிப் படைக்கப் பட்டவை என்பது வெளிப்படை. இன்று உலகப் பெரு மொழிகளுள் ஒன்றாகவும் தமிழ் மக்களோடு பன்னூறாண்டு தொடர்பு உடையதாகவும் இருப்பதோடு இன்னமும் நம்மிடையே ஆளுமை செலுத்திவரும் ஆங்கில மொழியிலுள்ள எழுத்துகள் சில தமிழில் இல்லாமையால் அவற்றையும் ஒலித்தற்கு ஏற்ப அம்மொழிச் சொற்கள் சிலவற்றையும் தமிழில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கின்றனர் சிலர். அவ்வகையில் `F' என்னும் ஒலி தமிழில் இல்லாமையால் அதனையும் சேர்த்துக்கொள்ள முற்பட்டு அதன் வரி வடிவை ஏலாது தமிழில் இரு குறிலுக்கு இடையிலன்றி வராத ஆய்த எழுத்தை (ஃ) ஒரு குறியீடாகக் குறித்து வருகின்றனர். இன்னும் ஆங்கிலத்தின் `B' என்னும் ஒலியும் தமிழில் மொழி முதலாக வருவதில்லை யாதலால் அதற்கும் ஒரு வரிவடிவம் சோத்தல் வேண்டும். அடுத்து டி என்னும் எழுத்து மொழி முதலாக ஏற்கப்படுவதூஉமன்றி, அப்படி ஏற்கப் படுங்கால் D-T வேறுபாடு குறித்து இன்னோரெழுத்தும் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறே Z என்னும் ஒலிக்கும் வேறொரு தனி வரி வடிவம் தேவைப்படும்.

ஆகவே, ஆங்கிலத்தைத் தமிழில் முழுமையாக ஒலிக்க வேண்டு மென்றாலும் மேற்கூறிய ஐந்து கிரந்த எழுத்துகளோடு மேலும் நான்கு புதுக்கிரந்த எழுத்துகள் படைக்கப்பட வேண்டும். இங்கு ஐந்து எழுத்து, நான்கு எழுத்து எனக் குறிப்பது மெய்யெழுத்தைப் பொறுத்தேயாதலால் இவை உயிரெழுத்துகள் பன்னிரெண்டொடும் வைத்து உயிர்மெய்யாக உறழப் பெறுங்கால் சமற்கிருதத்தை நோக்கி (5+60+1 (ஸ்ரீ) = 66) அறுபத்தாறு எழுத்துகளும், ஆங்கிலத்தை நோக்கி (4+48 = 52) ஐம்பத்திரண்டு எழுத்துகளும் ஆகும். ஆகவே மொத்தம் நூற்றுப் பதினெட்டு எழுத்துகள், முன்னமேயுள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களுடன்

சேரும். சேர்ந்து தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் மட்டும் மொத்தம் முந்நூற்று அறுபத்தைந்து ஆகும்.

இனி, வடமொழியும் ஆங்கிலமும் மட்டும் நமக்குப் போதுமானவையா? சீனமொழி வேண்டாவா? உருசிய மொழி தேவையில்லையா? சப்பான், செருமன் மொழிகளை எப்படிப் புறக்கணிக்க முடியும்? ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள மொழிகளில் சிலவேனும் நமக்குப் பயன்பட மாட்டாவா? இன்றைக் கில்லாவிட்டாலும் எதிர்காலத்திலாவது இம்மொழிகளை நாமே விரும்பியோ கட்டாயத்தினாலோ பயில வேண்டிய நிலை உருவாகாது என்பதற்கு என்ன உறுதி? இம் மொழிகளிலெல்லாம் இருக்கும் சிறப்பு எழுத்துகளை இக் கிரந்த எழுத்துகளை மட்டுமே கொண்டு எழுதிவிட முடியுமா? இவ்வாறே ஒவ்வொரு மொழியின் தொடர்புக்காகவும் நாம் மேன்மேலும் பற்பல எழுத்துகளைக் கூட்டிக் கொண்டே போனால் தமிழின் நிலை என்னாகும்?

மொழியாவது ஒலிவடிவம் யாதலால் ஒரு மொழியின் இயல்புக்கு மாறான வேற்றுமொழி யொலிகளை அதன்கட் புகுத்தின் அதன் இயற்கை நலம் சிதையும். தமிழில் பிறமொழிகளின் வடிவங்கள் எழுதிவிட்டதனாலேயே அவற்றை வாய்மொழியாய் இயல்பாக ஒலிக்க முடியாது. ஒலிப்பதாகவே வைத்துக் கொண்டாலும் அது தமிழாக இருக்காது; இயற்கை நலம் சிதைவுற்றுப் புல்லியதொரு புதுமொழிபோல் ஆகிவிடும். அதன் பயன்பாடு குன்றும். வழக்கு வீழும்.

ஆகவே, அயன்மொழிச் சொற்களைத் தமிழில் வழங்க நேரிடும் போது முன்னோர் நெறிக்கேற்ப

அயன்மொழிக் கிளவி அயலெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே!

என்னும் வறையரை எவ்வாற்றானும் புறக்கணிக்கத் தக்கதன்று என்பதும் போற்றிக் கடைப்பிடிக்கத் தக்கதேயாம் என்பதும் தெளியப் படும்.

ஒரு மொழியின் இயற்கைத் தன்மையைப் பிறமொழிகள் சீர்குலைக்கும். நிலை, மதம், பண்பாடு, அரசியல் ஆகியவற்றில் மொழியின் மூலம் வல்லாண்மை செலுத்த முனைவார்தம் பொல்லாத நோக்கத்தாலேயே ஏற்படுகின்றது. அவ் வாளுமை வேட்கை அறவொழிக்கப்படுங்கால் இத்தகைய சீர்கேடுகள் நிகழ வாய்ப்பில்லை!

இனி, ஸ்ரீப்ரியா, ராஜஸ்ரீ என்னும் பெயர்களை சிறீபிரியா, இராசசிறீ என்றும் இவ்வாறு பிற பெயர்களையும் எழுதப் புகுந்தால் அப்பெயர்களுக்குரியவர்கள் எவ்வாறு ஏற்பார்கள் என்று

அங்கலாய்க்கின்றனர். ஷண்முகம், தங்கராஜூ என்னும் பெயர்களை சண்முகம், தங்கராசு என்று எழுதுங்கால் எப்படி ஏற்றுக் கொள் ளுகிறார்களோ அவ்வாறு தான் ஏற்றுக் கொள்வார்கள். தமிழீழத்தில் ஸ்ரீயைச் சிறீ என்று எழுதுவது இயல்பான நடைமுறையாகவே உள்ளது. ஸ்ரீலங்கா என்பதைச் சிறீலங்கா என்று எழுதுவதை எதிர்ப்பாரோ ஏளனஞ் செய்வாரோ எவருமிலர். ஸ்ரீயை Sri என்பது நேரான ஒலிப்பன்று. அதனை Stree என்றால் ஒருவாறு பொருந்தினும் பொருந்தலாம். ஆயினும் ஆங்கிலத்தில் அதனை Sri என்பது பற்றி இங்குள்ளவர்கள் யாரும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் ஸ்ரீயை சிறீ என்று தமிழில் எழுதினால் மட்டும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றால் அத்தகைய மனப்பான்மைக்கு என்ன பெயர்? ஸ்ரீப்ரியா, ராஜஸ்ரீ முதலான பெயர்கள் இன்று பெருமைக்குரியனவாகக் கருதப்பட்டாலும் காலப் போக்கில் அவை ஏளனத்துக்குரியவாதல் ஒருதலை!

இசுலாமியர்களை இழுத்து, அவர்களெல்லாம் தம் சமயக் குறியீட்டுச் சொற்களைத் தமிழில் கூற விரும்புவார்களா என்னும் வினா எழுப்பப்படுகின்றது. இன்று தமிழில் ‘பெருநாள், நோன்பு, தொழு கை, பள்ளிவாசல், ஈகைத் திருநாள், நாயகம், ஓதுதல்’ என்பனவும் பிறவுமான தூயதமிழ்ச் சொற்கள் எத்துணைத் தெய்வத்தன்மை வாய்ந் தனவாக இசுலாமியர்களால் போற்றப்படுகின்றன என்பதை அறிகிலர் போலும். கிறித்தவ சமயத்திலுங்கூட ‘உயிர்த்தெழுதல், நல்ல வெள்ளி, நல்ல வியாழன், பூசை, கல்லறைத் திருநாள், சாம்பற்கட்டித் திருநாள்’ முதலிய சொற்களெல்லாம் சமயச் சாய்கால் பெற்றுப் பெருவழக் காயுள்ள சொற்களல்லவா? ஹஜ் யாத்திரையைக் கச்சு யாத்திரை என்று எழுதாவிட்டால் போகட்டுமே! திருச்செலவு என்று கூறலாமே. அல்லது அதற்கு ஈடாகவோ அதைவிடச் சிறந்ததாகவோ ஒரு சொல் லைப் படைத்துக் கொள்ளத் தமிழில் வளமில்லையா?

ஆங்கிலேயர்கள் திருநெல்வேலி, என்னுஞ் சொல்லை Tinnavely என்று மாற்றியதை நாம் ஒப்புக் கொள்ளாமல் இன்று அதை Thirunelvely என்று மாற்றுகிறோமே, அவ்வாறிருக்க நாம் பிறமொழிச் சொற்களை நம் மொழிக்கேற்பத் திரித்து வழங்குவது எப்படி முறையாகும் என்றால், ஆங்கிலேயர் திருநெவேலி என்ற சொல்லையே Tinnavely என்று தம்மொழி மரபுக்கேற்பத் திரித்து வழங்கினர்; இப்போதும் அவ்வாறே வழங்குவர். அவர்களுடைய ஆங்கிலத்தை நாம் வழங்குகின்றமையால் நாம் Thirunelvely என்று மாற்றிக் கொள் கிறோமே யல்லாமல் அவர்கள் மாற்றிக் கொள்ளவில்லை. அவர்களால் அப்படிப் பலுக்க முடியாது. ஆகவே நாம் நம் மொழிக்கேற்பப் பிறமொழிச் சொற்களைத் திரித்து வழங்குவது எவ்வாற்றானும்

பிழையாகாது.

இன்று ஆங்கில மொழியில் உள்ள சொற்களெல்லாம் அம்மொழிக்கே உரிய சொற்களல்ல. ஏராளமான பிறமொழிச் சொற்களை தாராளமாக ஏற்றுக் கொண்டு விளங்குவதே ஆங்கிலம். ஆனால் அச்சொற்களெல்லாம் அவ்வம் மொழியின் ஒலி முறைப் படியே ஆங்கிலத்தில் வழங்கவில்லை. எடுத்துக் காட்டாக லேவ் தல்ஸ்தோ என்ற உருசிய மொழிப் பெயரை ஆங்கிலத்தில் Leo Tolstoy என்று வழங்குகிறார்கள். ஆனால் நாம் அதனை லியோடால்ஸ்டாய் என்று தான் கூற வேண்டும்; இலியோ தால்சுதாய் என்று கூறக்கூடாது என்றால் எந்த வகையில் ஞாயம்? Augustus என்பதை அகத்தசு என்று எழுதுவது எப்படிப் பிழையாகிவிடும்?

ஆகவே, இதுகாறுங் கூறியவாற்றால் தமிழில் பிறமொழிச் சொற்களை (சிறப்புப் பெயர்களை) எழுதுங்கால் தமிழியல்புக்கேற்பத் திரித்துக் கொள்ள வேண்டுமேயல்லாமல் அவற்றை அம்மொழி ஒலிப்படி பலுக்க வேண்டும் என்பதும் அதற்காகக் கிரந்த வரிவடிவங்களை ஏற்றுக்கொள்ளலாம்; புதியன சில புனைந்து கொள்ளலாம் என்பதும் தவறான கோட்பாடாகும் எனக் கொள்க!

- இறை

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்

(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் – 300/–
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் – 200/–

பல்லடம் ஆறுமுகம் மறைவு

நெடுநாள் தென்மொழி அன்பரும், பாவலரேறு ஐயா அவர்களின் படையணியைச் சேர்ந்தவரும், அரசின் அடக்குமுறை ஒடுக்கு முறைகட்கு ஆட்பட்டவருமான பல்லடம் ஆறுமுகம் அவர்கள் கடந்த விடை 18 அன்று (31.5.96) இயற்கையெய்தியமை குறித்து வருந்துகிறோம். அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர்.

தமிழ் இயக்கத் தள நாயகர் பாவாணர்

இந்நூற்றாண்டின் தலை சிறந்த மொழியறிஞரும் தமிழின வரலாற்றறிஞருமான பாவலரேறு ஐயா விளங்கிக் கொண்ட ஆசிரியப் பெருந்தகையுமான போற்றுதலுக்குரிய மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் மறைந்து பதினைந்து ஆண்டுகள் கடந்தபின் இப்போதும் நினைவுகூர்ந்து அவர்களுக்கும் தமிழ்நாட்டரசு பெருமைப்படுத்தியிருப்பது பாராட்டுதற்கும் மகிழ்ச்சிக்குமுரியது.

மொழிஞாயிறு அவர்கள் தமிழ் திராவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் என்ற தம் ஆய்வுக் கோட்பாட்டை நிறுவுதற்குப் பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டு வந்தார். அடிப்படையான செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியை உருவாக்கி வெளியிடத் தென்மொழித் திட்டமொன்றைப் பாவலரேறு ஐயா அவர்கள் வகுத்தார்கள். அது செயற்படத் தொடங்கி நடைபெற்று வந்த நிலையில் அற்றைத் தி.மு.கழக அரசு அத்திட்டத்தை மேற்கொண்டது. ஆயினும் அடுத்து வந்த அரசு அதனைச் செம்மையாகச் செயற்படப் போதுமான ஏந்துகள் செய்துதராமையால் ஏந்துக் குறைவான நிலையே நீடித்தது. அவ்வகர முதலியின் முதன் மடலத்தின் முதற்பகுதி (அகரம்) எழுதி முடிக்கப்பட்ட நிலையில் அதுவெளிவரா முன்னமே பாவாணர் ஐயா அவர்கள் இயற்கை யெய்தினார்.

அத்துறையைச் சரியாகப் பேணாமையால் - கேட்ட வசதிகளைச் செய்து கொடுக்காததனால் துறை மிகவும் முடங்கியது.

அவர்க்குப் பின் துறைக்குச் சில வசதிகளை அரசு செய்ய முன்வந்தது. எனினும் அவருக்குப் பயனளிக்காது போனது. அதன் வழி ஒரு நல்ல தமிழறிஞரின் பயனை இந்நாடும் இனமும் இழந்தன.

இவையெலாம் ஒரு புறம் இருப்பினும் அவரின் அரிய நூல்கள் அனைத்தையும் இன்று பொறுப்பேற்றுள்ள தி.மு.க.ழக அரசு, அரசுடைமையாக்கியுள்ளது வரவேற்கத்தக்கது. தமிழ் இயக்கத் தளநாயகர் என்று பெருமைப்படுத்திக் கொண்டது மகிழத் தக்கது. அவர்தம் குடும்பத்துக்குப் பெரும் கொடை வழங்கிப் புரப்பது ஆறுதலளிக்கக் கூடியது. தென்மொழி தன் நெஞ்சார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

- மா. பூங்குன்றன்

பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் முதலாண்டு நினைவு நாள் நினைவு மலர் வெளியீட்டு நிகழ்ச்சி

✻❄✻

பாவலரேறு முதலாண்டு நினைவுநாள் மற்றும் நினைவுமலர் வெளியீட்டு நிகழ்ச்சி கடந்த ஆடவை 8 காரி (22.6..96) அன்று, சென்னை -அண்ணாசாலையிலுள்ள வி.ஞா.ப. (V.G.P.) வெற்றி மாளிகை (Victory House) தேம்பாவணி அரங்கில் நடைபெற்றது.

ஆடவை 2 ஞாயிறு (16.6.96) அன்று நடைபெறவிருந்த இந் நிகழ்ச்சி பெருமழை புயல் வெள்ளத்தால் நேர்ந்த மின்வெட்டு, போக்குவரத்துச் சீர்குலைவு ஆகியவற்றின் காரணமாக ஒத்திவைப்பது தவிர்க்க முடியாததாயிற்று. ஆகவே, நிகழ்ச்சியை 22.6.96க்கு ஒத்திவைத்து, நிகழ்ச்சியில் பங்கேற்போருக்கும் ஆங்காங்குள்ள தென்மொழி யன்பர்களுக்கும் தொலைவரி மற்றும் தொலைபேசி வழிச் செய்தி தெரிவிக்கப்பட்டது. செய்தித்தாள்கட்கும் செய்தி விடுக்கப்பெற்றது. ‘கதிரவன்’ நாளேட்டில் விளம்பரமும், செய்தியும் வெளியிடப்பட்டன.

நிகழ்ச்சி நடைபெறவிருந்த உலகப் பல்கலைக் கழக அரங்கம் ஒத்திவைப்பு நாளில் வேறு நிகழ்ச்சிக்காக முன்னரே பதிவு செய்யப் பெற்றிருந்தமையால் உடனடியாக வி.ஞா.ப. (V.G.P.) வெற்றிமாளிகை-தேம்பாவணி அரங்கம் உறுதிசெய்யப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்க இருந்த திருவாளர்கள் பழ. நெடுமாறன், ச. விடுதலை விரும்பி, பெ. மணியரசன் ஆகியோர் ஒத்திவைப்பு நாளில் வேறு நிகழ்ச்சிக்கு இசைந்திருத்தலால் வருகை தர இயலாத தம் நிலைகுறித்துத் தெரிவித்தனர்.

ஒத்திவைப்புச் செய்தி இயன்றவாறெல்லாம் பரப்பப் பெற்றிருந்துங்கூட அச்செய்தி கிட்டப்பெறாது திருவாளர்கள் மும்பை ஆ.பி. பெருமாள், முனைவர் ஆறு. அழகப்பன், முனைவர் க.ப.அறவாணன், புலவர் அரச மாணிக்கனார், சா.இரும்பொறை, குமர. தன்னொளியன், ந.வை. இளஞ்செழியன், ‘தமிழம்’ செ. பன்னீர்ச்செல்வம், மலேசியோ தமிழன்பன், மருத்துவர் குமரேசன், பாவலர் இளஞ்சித்திரன், தியாகு, சடகோபன், தேன்மொழி, கி.பெருமாள், அழ.இளமுருகன், பொய்யாமொழி முதலானவர்கள் 16.6.96 அன்று உலகப் பல்கலைக் கழகப் பணி நடுவத்துக்கு வந்து திரும்பினர்.

வெளியீட்டு நிகழ்ச்சி நடந்த, 22.6.96 அன்று மாலை 4.30 மணி யளவில் தேம்பாவணி அரங்கில் திருவாட்டி தேன்மொழியருளியின்

தமிழ் வாழ்த்துடன் சொல்லாய்வு அறிஞர் அருளியார் தலைமையில் நிகழ்வு தொடங்கியது. மா. பூங்குன்றன் வரவேற்றுப் பேசினார். புலவர் இறைக்குருவனார் தொடக்கவுரையாற்றினார். திருவாளர் திருவாரூர் தங்கராசு பாவலரேறு நினைவுமலரை வெளியிட்டு உரையாற்றினார். கடலூர் மணிமாறன், இரா. திருமாவளவன், பாவலர் நாவை-சிவம், திரு. அதியமான், பாவலர் இளஞ்சித்திரன், திரு. அ.தெ. தமிழநம்பி, கரடிப்பட்டி கண்ணன், புலவர் வெற்றிவேந்தன் ஆகியோர் மலரைப் பெற்றுக் கொண்டு ஏற்புரை நிகழ்த்தினர்.

இயக்குநர் சேகர், முனைவர் ந. பிச்சமுத்து, புலவர் சுந்தரராசன், முனைவர் சுப. வீரபாண்டியன், பாவலர் சுரதா, பேரா. சச்சிதானந்தம், வழக்கறிஞர் பக்தவத்சலம், முனைவர் ஆறு. அழகப்பன், பாவலர்கோ அப்துல் ரகுமான், பேரா. ம. இலெ. தங்கப்பா, கோவை இராமக்கிருட்டிணன், திரு. தியாகு, பேரா. தீரன் ஆகியோர் நினைவு உரையாற்றினர். புலவர் சிவசங்கு கையறுநிலைப் பாவொன்று படித்தார்.

தென்மொழி யன்பர் பல்லடம் ஆறுமுகம் அவர்களின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருவாட்டி இறை. பொற்கொடியம்மை நன்றிநவின்றார். நிகழ்ச்சிக்கு ஏராளமான அன்பர்கள் வருகை தந்திருந்தனர். இரவு 10 மணிக்கு நிகழ்ச்சி நிறைவுற்றது.

திருவாளர்கள் சடகோபன், தாமோதரன் ஆகியோர், 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை' க்கான நன்கொடையாகத் தலைக்கு உருவா ஆயிரம் மேனி உருவா ஈராயிரத்தை அன்னை தாமரை பெருஞ் சித்திரனார் அவர்களிடம் வழங்கினர்.

திரு.மா. பூங்குன்றன் *(வரவேற்புரை)*

நம் ஐயா அவர்களின் முதலாண்டு நினைவு நிகழ்ச்சியும், நினைவு மலர் வெளயீட்டு நிகழ்ச்சியும் கடந்த 16.6.96 அன்று நடத்தத் திட்டமிட்டிருந்தும் அடாத மழை காரணமாகவும், மின்சாரத் தடை காரணமாகவும் மலர் வேலை முழுவதுமாய் நின்றது. வெளியூர் அன்பர்களுள் பலரும் தொல்லைப்பட நேர்ந்தது. மீண்டும் இன்று (22.6.96) இந் நிகழ்ச்சியை நடத்துகிறோம். ஐயா அவர்களின் நினைவு நாளை ஒரு சடங்காகச் செய்யாமல் ஆண்டுதோறும் அவர்களின் எண்ணத்தையும் செயலையும் உந்துதலையும் உணர்வையும் முழுமையாக ஏற்றுச் செயல்படும் நம்முடைய சீர்தூக்கல் நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சியை எண்ணுவோம். ஒவ்வோர் ஆண்டும் அந்தச் சீர்தூக்கல் வழி நம் செயல்பாட்டை அளவிடுகிற அளவிலேயே இந்

நினைவு நாள் நிகழ்ச்சியை எண்ணுவோம். இந்த நினைவு நாளில் மலர் ஒன்றையும் கொண்டு வந்திருக்கிறோம். இம் மலர் பல வகையில் சிறப்புடன் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனை வெளியிட வருகை தந்துள்ள திருவாரூர் தங்கராசு ஐயா அவர்களையும் நிகழ்ச்சிக்கு வந்திருக்கிற அறிஞர்கள் அனைவரையும் வரவேற்கிறோம்.

புலவர் இறைக்குருவனார் (தொடக்கவுரை)

ஐயா பாவலரேறு அவர்கள் எதுவும் திருத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கவேண்டும் என்று விரும்புபவர். ஒவ்வொன்றையும் துல்லியமாகவும் நுணுக்கமாகவும் ஆராய்ந்து கண்டு செப்பமாகச் செய்யவேண்டும் என்பதில் அக்கறை காட்டுவார். எந்த ஒரு செயலிலும் ஓர் ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துவார். ஒரு வேலையைச் செய்துகொண்டிருப்பவர் அதனை அப்படியே இடையிலே விட்டுவிட்டுச் செல்ல நேர்ந்தால் இன்னொருவர் வந்து அதை எளிதில் தொடர்ந்து செய்யும்படியாக எவ்வகைச் சிக்கலுமில்லாமல் இருக்கவேண்டும். முதலில் செய்தவர்தாம் வந்து செய்யவேண்டும் என்னும்படியாகவோ, அவர் வந்து எடுத்துக் கொடுத்துச் சொல்லிக் கொடுத்துதான் ஆகவேண்டும் என்னும் படியாகவோ இருக்கக்கூடாது என்று சொல்வார். இப்படியெல்லாம் சொன்னவர்; நாம் எளிதில் தொடர முடியாதபடி தம் பணிகளை இடையிலேயே விட்டு விட்டு - நாம் கைபிசைந்து நிற்கும்படியாக நம்மைக் கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

விட்டுச் சென்றுவிட்டமையினாலே அவர் மறைந்துவிட்டார் - இறந்துவிட்டார் என்று இன்னமும் நம்பமுடியவில்லை. இருக்கிறார் என்கிற உணர்வுதான் நம்மைச் செயல்படச் செய்து கொண்டிருக்கிறது.

ஐயா அவர்களின் முதல் நூல் வெளியீட்டுவிழா - 'ஐயை' வெளியீட்டு விழா புதுவையிலே நடைபெற்றது. அதிலே அவர்கள் கலந்து கொள்ளவில்லை; 'கனிச்சாறு' வெளியீட்டு விழா சென்னையிலே முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது. அதிலும் அவர்கள் பங்கேற்கவில்லை. அடுத்து நடைபெற்ற 'செயலும் செயல்திறனும்' வெளியீட்டு விழாவிற்கும் வருகைதரவில்லை. அந்த வகையிலேயே 'நூறாசிரியம்' வெளியீட்டு விழாவிற்கும் வரவில்லை; இந்த மலர் வெளியீட்டு விழாவுக்கும் வரவில்லை என்று தான் எண்ணிக் கொண்டிருக்கிறோம். வேற்றூருக்குச் சென்றிருக்கிறார்; வெளிநாட்டுச் சுற்றுச்செலவு மேற்கொண்டிருக்கிறார் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறோம்; தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறோம்.

சொல்லாய்வறிஞர் அருளியார் (தலைமையுரை)

கூட்டத்திற்குத் தலைமை தாங்குவது இக்கட்டுடையது. அதற்கென்று தனித் தகுதியெல்லாம் இல்லை. ஐயா அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள், “எதிரில் உள்ளவர்கள் எல்லாம் மகிழ்ச்சியாய்த் தூங்குவார்கள் தம்பி..., வெற்றிலை போடக் கூட இயலாது” என்பார்கள். “திரு.வி.க. அவர்கள் இது போலும் கூட்டங்களில் அமைந்து அமர்ந் திருந்து ஒன்றுக்குப் போக மாட்டாமல் இருந்து இருந்து சிறுநீர்க் கோளாறு கூட வந்துவிட்டது” என்று ஐயா அவர்கள் குறிப்பிடுவார்கள். திரு.வி.க. அவர்களைக் குறிப்பிடுகிறபோது

“குப்பத்தும் சேரியினும் கோபுரத்தும்
தொண்டு செய்ய நுழைந்த காலான்
முப்பத்தேழ் நூலெழுதி அறிந்தார்க்கும்
அறிவுறுத்த நுழைந்த கையான்
ஒப்பித்தாம் மணந்த மனை இழந்த
இளம் பருவத்தும் ஒருத்தி கையை
தப்பித்தாம் பிடியாமல் தமிழ்த்தொண்டை
தலைப் பிடித்த தகையோன் அன்னோன்”

- என்று அவர் தம் தூய தொடுணர்வை எழுதினார்கள். அத்தகைய தூய. தொண்டுணர்வு நம் ஐயாஅவர்களிடம் இருந்தது. அதோடு அவரிடம் அஞ்சாமை, ஒட்டாரத்தன்மை இருந்தது. ஒன்றைச் செய்வதிலே விடாப்பிடியாகத் தொடர்ச்சியாகத் தொடர்ந்து செய்கிற தன்மையை நாம் ஐயா அவர்களிடம் பார்த்தோம்.

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை

- என்கிற குறளை ஐயா அவர்கள் சொல்வது போல - போர்க்களத்தில் எவர் முன்னே செல்கிறாரோ அவரைத்தான் வாள்களும், குத்தீ ட்டிகளும் வந்து தாக்கும்-அதற்குத் தாம் ஓர் எடுத்துக்காட்டாக இருப்பதாகக் கூறுவார்கள்.

“அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை” - என்று ஐயா அவர்கள் அடிக்கடி கூறியது போலத் தாம் தனித்தே மிகப் பெரிய ஈகத் தொண்டு வாழ்க்கையை வாழ்ந்து விட்டுச் சென்றுள்ளார்கள்.

இங்குப் பலர் வந்திருக்கிறார்கள். பேரா.ம.இலெ.தங்கப்பா அவர்கள் வந்திருக்கிறார்கள் தொடக்கத்தில் ஐயா அவர்களின் பாடலுக்கு அடுத்து இவர்களின் பாடலே எம்மைப் பெரிதும் ஈர்த்தது.

ஐயா அவர்கள் 1965- இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைப் பட்டபோது, பலரும் ஓடி ஒளியத்தொடங்கிய சூழலில், தமிழாசிரியராக

பணியாற்றிக் கொண்டிருந்த ஐயா ம.இலெ. தங்கப்பா அவர்கள் தான் இரண்டு மாத இதழ் கொண்டு வந்தார்கள்.

"அரியேற்றைச் சிறைப்புகுக்கின் அதன் முழக்கம் அடங்கிடுமா-அண்டமெல்லாம் எரியேற்றும் பெரும்பிழம்பைச் சிறுநீர்தான் அவித்திடுமா...." - என்று முப்பதாண்டுக்கு முன்னர் எழுதிய பெருமகனார் அவர்.

அவர்களுக்கெல்லாம் இவ்வுணர்வுக்குத் தூண்டலாய் இருந்த நம் ஐயாஅவர்கள் இறுதி வரை அதே உணர்வெழுச்சியுடன் இருந்தார்கள்.

ஏராளமான செய்திகளை ஐயா அவர்கள் பற்றி எடுத்துக்கூற அறிஞர் பெருமக்கள் பலர் வந்திருக்கிறார்கள். ஆற்றல் பெற்ற பல இயக்கத்தினர் இங்கு வந்திருப்பது நெஞ்சுக்கு ஊக்கமாகவும், நம்பிக்கையளிப்பதுமாகவும் இருக்கிறது.

திருவாரூர் தங்கராசு (மலர் வெளியீட்டுரை)

தனித் தமிழே மூச்சாகவும், தமிழ்ப்பெருமக்களின் வாழ்வே தம் வாழ்க்கையாகவும் வாழ்ந்திட்ட பாவலரேறு ஐயா அவர்களின் மலரை வெளயிடுகிற தகுதி எனக்கு இல்லையானாலும் அந்தத் தகுதியை உருவாக்கித் தந்த தந்தை பெரியார் அவர்களுடைய தொண்டர்களில் அகவை மிகுந்தவன் என்கிற காரணத்தால் எனக்கு இப்பணியை அளித் துள்ளார்கள். இம்மலரை வெளயிடுபவனாக நான் இல்லை. இம்மலரை வெளியிட தொண்டனாக இருக்கிறேன் என்று கூறி அனைவருக்கும் மலரை வழங்க இருக்கிறேன். ஐயா அவர்களிடம் அதிகத் தொடர் பில்லாதவன் நான். பாவேந்தரிடம் பழகிய அளவுகூடப் பாவலரேறு விடம் நான் பழகியதில்லை. இருப்பினும் பல திருமண நிகழ்ச்சிகளில், கூட்டங்களில் கலந்திருக்கிறோம்.

நம் தேசத்தில் தமிழ் மொழியை அழிக்க வேண்டுமென்றே ஆரியர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவை ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள் பாவேந்தரையும், பாவலரேறுவையும் எப்படி அறியமுடியும், புகழ முடியும்.

ஆங்காங்கே மாந்தன் பிறக்கிறான். ஆனால் இங்குதான் சாதியாய்ப் பிறக்கிறான் ஆளுமைப் பார்ப்பனர்களின் ஆட்சியில்தான் அவர் தடாக் கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டு உடல்நலக் குறைவாக்கப்பட்டார்.

ஐயா பெரியார் அவர்களுக்கும், பாவலரேறு அவர்களுக்கும் சில வகையில் முரண்கள் உண்டு. அது மொழி அளவுப் பார்வையில் உண்டு.

வங்கப்புலவர் தாகூருக்கு 350 குறுக்கதுக்கு (ஏக்கருக்கு) நிலத்தை அரசே கொடுத்து நினைவிடம் அமைந்திருக்கிறது. ஆனால் ஐயாவுக்கு அத்தகைய நிலை இங்கு இல்லை!

ஏற்புரைகள்

முனைவர் கடவூர் ப. மணிமாறன்

தமிழ் மொழியை, தமிழ் இனத்தை, தமிழ்நாட்டை மீட்பதற்காக ஐயா அவர்கள் ஆற்றிய அரை நுற்றாண்டுக்காலத் தொண்டு வரலாற்றில் என்றென்றைக்கும் நிற்கும். தமிழனுக்கு இருக்க வேண்டிய சூடு சுரணையோடு தொடக்கக் காலத்திலிருந்து எதனையும் பெரிதென எண்ணிடாமல் தமிழ் தொண்டாற்றியவர்கள்.

அத்தகைய ஐயா அவர்களை அவர்கள் இருக்கிற காலத்தில் இத்தமிழுலகம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். ஐயா அவர்களைத் தொடர்ந்து அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தென்மொழி அன்பர்கள் தொடந்திடுவார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

இரா.திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள்)

பொதுத் தொண்டிற்கு வருபவர்கள் தன்னலம் கருதாமல் பொது நலம் உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பதை ஐயா அவர்கள் தாம் 1965 இல் இரண்டு திங்கள் சிறை வைக்கப்பட்டபோது குறிப்பில் எழுதியிருக்கிறார்கள். அதில் பொதுதொண்டன் தன்னல இழப்பு இல்லாமல் செயலாற்றமுடியாது என்றும் நம் மக்கள் விடுதலையைப் பெறப் பல நூற்றாண்டுகளாகும்; அதற்குள் நம்மால் இயன்ற பணிகளை நாம் நம்மை இழந்து செய்திடல் வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். தமிழகத்தில் உள்ள தலைவர்கள் அனைவரும் தன்னலமுடைவர்களாகயே இருக்கிறார்கள். ஏனெனில் இன்றைக்கும் தமிழகத்தில் எவ்வகை மாற்றத்தையும் நாம் காணமுடியவில்லை. தமிழகத்தின் கடைசிக் குடிமகனாக இருந்து நான் சொல்கிறேன் பாவலரேறு ஐயாவுக்கு விழா எடுத்தால் மட்டும் போதாது.

இக்குமுகத்தில் சீழ்பிடித்துள்ள சாதியை நாம் வேரறுக்கவேண்டும். அத்தகைய பணியைத் தமிழ்த் தேசியத்திற்காகத் தொண்டாற்றும் அறிஞர்கள், தமிழ் தேசியர்கள் கையிலெடுக்காவிட்டால் வேறு யாரும் கையிலெடுக்க மாட்டார்கள். சாதியை ஒழிக்க, தீண்டாமையை ஒழிக்கப் பாவலரேறு என்ன செய்து விட்டார் எனத் தோழர் ஒருவர் கேட்டார். அதைத் தான் நானும் அனைத்துத் தமிழர்களிடமும் நீங்கள்

அனைவரும் சாதியை ஒழிக்க, தீண்டாமையை ஒழிக்க, என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கேட்கிறேன்.

தமிழ்த் தேசியத்தை எந்த அளவு வீச்சாகக் கொண்டு சென்றார் களோ அந்த வகையில் பொதுத் தொண்டர்கள் இல்லாமல் உள்ளனர். எனவே தாழ்த்தப்பட்டோர் விடுதலையும் பெண்கள் விடுதலையும் முன் னிலையாக இருந்தால்தான் தமிழ்த்தேசியம் வளரும் - வளர்க்கப்படும் அதைவென்றெடுக்க முடியும்.

பாவலர் நாவை-சிவம்

மூவாயிரம் ஆண்டுகால அடிமைத்தன வாழ்க்கையில் இம்மொழி, இன,நாட்டு விடுதலைக்காகப் பாடாற்றி தம்மையே ஈகப்படுத்திக் கொண்டும், தம் குடும்பத்தையே ஈடுபடுத்தியும்வந்த பெருந்தகை பாவலரேறு ஐயா அவர்கள்தாம் நான் இன்றைக்கு இந்த அளவில் புலவராகப் பெருமைகொள்வதற்குக் காரணம்.

நான் மணப்பாறையில் தமிழே குறி, வள்ளுவமே நெறி - என்று கூறி ஐயா அவர்களின் பெருந்தொண்டைப் பரப்பி வருகிறேன்.

ஐயா அவர்களின் பெருமையை அனைவருக்கும் பரப்பி வருகிறோம். ஐயா அவர்களின் பெருமைகளை மேடையில் பேசுவது என்றும் மட்டும் இல்லாமல் ஐயா அவர்களின் மொழி, இன, நாட்டு முயற்சிகளை முன்னெடுத்துச் செயல்படவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

திரைப்பட இயக்குநர் சேகர்

கல்லூரிக் காலங்களில் தென்மொழி படித்திருக்கிறேன். நானும் தமிழ்நாட்டில் பிறந்து தமிழனாய் வாழ்வதால் ஐயா அவர்களின் கருத்துகளில் எனக்கு மாறுதல் இருக்க முடியாது. ஐயா அவர்கள் எண்ணியதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் செயல்படுத்து வோம். நான் திரைப்படத்துறையில் முழுமையாய் இல்லாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சம் செயல்படுத்துவேன். மொழி அழிந்துவிட்டால் பண்பாடும் இனமும் அழிந்து விடும். ஆனால் எப்படி மொழி பாது காக்கப்படும் என்பது கேள்வி. தமிழினம் வளரவேண்டும். அனைவரும் வளரவேண்டும். தமிழர்கள் அறிவாளிகள், அஞ்சா நெஞ்சினர், மாந்தநேயம் உள்ளவர்கள் அது உலக அரங்கில் வளரும். அது அவ்வாறு வளர்க்கப்பட வேண்டுமானால் முதலில் ஒற்றுமை வேண்டும். மற்றவர்கள் நம்மை அடிமைப்படுத்துவதைவிட, தமிழனே தமிழனை அடிமைப்படுத்துவதை எதிர்க்க வேண்டும். முதலில் தமிழனுக்குள்ளே

சாதி ஒழிக்கப்பட்டால்தான் தமிழன் ஒற்றுமைப்பட முடியும். சாதி வேறுபாடும், பொருளியல் ஏற்றத்தாழ்வும் மாறவேண்டும். பொருளியல் சமன்மையில்லாமல் இருப்பதும், சாதி வேறுபாடும் கொண்டு தூய தமிழ்ப்பழக்கம் என்பதே சரியானதாகிவிடாது. எனவே சாதி வேறுபாடு இல்லாமலும்,பொருளியல் ஏற்றத்தாழ்வும்அற்ற தமிழன்தான் முன்னேறமுடியும்

அதியமான்

ஐயா அவர்களை முதன்முதலில் சந்தித்து 'ஐயை'ப் பாவியத்தை வில்லிசையில் அமைத்து நான் நடத்தியபோது ஐயா அவர்கள் கண் கலங்கினார்கள். அது போன்றே தமிழர்கள் படுகின்ற தொல்லைகளை, ஈழத்தில் நடக்கின்ற தொல்லைகளையும் கண்டு கலங்கியவர்கள் ஐயா அவர்கள். அவர்களை நாம் இழந்துவிட்ட பிறகு நான் மனம் உடைந்து போனேன்.

அ.தெ.தமிழநம்பி

நாட்டு விடுதலைப்போராளி மொழிகாக்கும் பெருமான் குமுகச் சீர்திருத்தப் பெருமகனார் எனப் பலர் ஐயா அவர்களைப் புகழ்ந்திருக்கின்றனர். நான் ஐயா அவர்களுடன் பல காலம் பல முழு நாள்கள் தங்கி பழகியிருக்கிறேன். ஐயா அவர்கள் ஒரு தூசு கூட,துளி கூடச் சாதி உணர்ச்சி இல்லாத பெருமகனார். அணுவளவுக் கூட சாதியை பேசாத தலைவர் அவர். அது போன்ற எந்தத் தலைவரும் இல்லை.

அக்காலத்து இளைஞர்களும், மாணவர்களும் குமுக அடிமைத் தனத்தின் அவலங்களைப் பல நேரத்திலும் எதிர்க்கிற வகையில் எப்படி எப்படியெல்லாம் ஓர் இதழ் கிடைக்கப்பெற வேண்டும் என எண்ணினார்களோ அப்படியான இதழாகத் தென்மொழி இருந்தது. இக்காலத்துப் பொதுவுடைமையரும், பிறரும் தென்மொழி எனும் காந்தப்புலத்தால் ஈர்க்கப் பெற்று மாழைகளே ஆவர். மொழி, இன, நாட்டுணர்ச்சி என்றுமட்டும் இல்லாமல் அறிவியல் பற்றி-அறிவியல் தமிழ் பற்றி நிறையக் கவனம் செலுத்தியது தென்மொழி.

அன்றைக்கு ஐயாவின் பெயரைக் கேட்டாலே நடுங்கிப் பேசத் தயங்கியவர்கள் எல்லாம் இன்றைக்கு எழுந்து பேசுகிறார்கள்.

"உரியாரைப் போற்றுவதின் அவருரைத்த பலவற்றுள் ஒன்றையேனும் சரியாகக் கடைப்பிடித்தால் தமிழ்நாடு சரியாதம்மா" என்று பெரியாருக்கு ஐயா அவர்கள் எழுதினார்கள். இன்றைக்கு ஐயா

அவர்களின் கொள்கையையும் நாம் கடைப்பிடித்திட முனைதல் வேண்டும்.

பாவலர் இளஞ்சித்திரன்

திராவிடத் தேசியத்திலிருந்து என்னைத் தமிழ்த் தேசியத்திற்குக் கொண்டு வந்தவர் ஐயா அவர்கள். தனித்தமிழில் பேச வைத்தவர்கள். ஐயா அவர்களைப் பற்றி பேரா.ம.இலெ. தங்கப்பா அவர்கள் குறிப்பிட்டதுபோல ஐயா அவர்கள் தமிழ்த்தேசியம் எனும் நடுப் புள்ளியை நோக்கிச் செயலாற்றுபவர். அவர் போன்றே நானும் செயல்பட முனைபவன்.

தமிழ்த் தேசியம் ஒன்றுதான் தமிழ்த் தம்பியே உன் கொள்கையாக இருக்க வேண்டும் என ஐயா குறிப்பிட்டார்கள்.

எனவே நானும் ஐயா அவர்களின் நோக்கத்தை எடுத்து முழுமையாய்ச் செயலாற்றுவேன். ஐயா அவர்களின் பணிமுடிக்க அனைவரும் ஒன்றிணைவோம்-ஒற்றுமைப்படுவோம்

கரடிப்பட்டி கண்ணன்

தென்மொழியை முதன்முதலில் கல்லூரியில் பார்த்தபோது மின்சாரம் தாக்கியது போன்ற உணர்வு. அது இன்னும் மாறவில்லை. தமிழனத்தின் எதிரியை அடையாளம் காட்டியதில் ஐயா பணி அளப்பரியது.

ஆனால், அது ஏன் அடுத்தக் கட்டத்திற்கு நகரவில்லை. சாதி ஒடுக்குமுறையைப்பற்றி ஐயா அவர்கள் அதிகம் பேசவில்லை என்பது பலரின் திறனாய்வுக் கருத்து. இக் குமுக மாறுதலுக்கு எவ்வகை வழியில் அதைச் செயல்படுத்தவேண்டும் என இங்கு வந்துள்ளோர் அனைவரும் முனைந்து ஆயவேண்டும்.

புலவர் வெற்றிவேந்தன்.

ஐயர் அவர்களைத் திறனாய வேண்டும். ஆனால் எப்படித் திறனாய வேண்டும் என்பது கொடுமையானது. சாதியை வளப்பவன், அல்லது எண்ணுபவன் தமிழை வளர்க்கிறேன் என்றால் அவன் தமிழன் இல்லை. ஐயா அவர்கள் மறைமலையடிகளுக்குப் பின்னால் தமிழை மட்டும் வளர்க்கவில்லை; ஓர் இயக்கத்தையே கொண்டு சென்றார் கள். தமிழுக்காகவும், தமிழருக்காகவும் பதினெட்டு முறை சிறை சென்றுள்ளார்.

பாவாணர் தமிழ் இயக்கம் கண்டார். பாவலரேறு தமிழ் அரசியல் கண்டார். பொதுவுடைமைக்காரர்கள்கூட இன்றைக்குத் தமிழைப்பற்றிக் கவனம் செலுத்துவதற்குப் பாவலரேறு ஐயா அவர்களின் செயல்பாடு முகமைக் காரணம்.

தமிழ் விடுதலை-தமிழக விடுதலை என்பது சாதியற்ற, பொருளியல் சமன்மை கொண்ட, அரசியல் தூய்மை கொண்ட ஒரு குமுக வாழ்க்கையை நோக்கியது.

எனவே திறனாய்வு செய்வோர் அவற்றைக் கணக்கிலெடுத்து அதற்கு மேல் திறனாய்வு செய்ய வேண்டும்.

பேரா. பிச்சமுத்து

நான் நேரில் அதிகப்பழக்கமில்லாதவன். ஆனால் கொள்கையால் தொடர்புடையவன். ஓராண்டுக்கு முன்னர் இருந்த ஐயா அவர்கள் இன்று இல்லை. ஆனால் அவர்களின் உணர்வுகள் நம்மிடையே நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவரின் நோக்கம் தமிழ்த் தேசியம். அதற்கு மார்க்சியம் ஒன்றுதான் வழி. இங்குச் சாதியும், வகுப்புப் பிரிவுகளும் அதிகம் உண்டு. இந்த இரண்டையும் பெரியார் வழியாகவும் களையப் பெருஞ்சித்திரனார் அவர்கள் நமக்குச் செம்மையாகச் சொல்லிக் கொடுத்தார். பல பல்லிளிப்புப் பாவலர்கள் போன்று பெருஞ்சித்திரனார் இல்லை. தனித்தமிழுக்காக இருந்த மறைமலைபடிகள், பாவாணர் போன்றோருக்குக் கூட மதிப்பு இல்லை. அவர் பெரும் பணக்காரர் இல்லை, பெரிய அறிமுகமானவர் இல்லை. ஆனால் அவருக்கு ஏன் இவ்வளவு மதிப்பு. அவருக்கு தமிழ்த் தேசிய உணர்வு இருந்தது. அவர் மறைந்து விட்டாலும் அவர் பல்லாயிரக்கணக்கான வரை உருவாக்கி வைத்துள்ளார். உலகில் தமிழன் எங்கு பாதிப்படையினும் அவனுக்குக் குரல் எழுப்பத் தூண்டும் உணர்வு நாம் பாவலரேறு ஐயா அவர்களிடமிருந்து பெற்ற உணர்வு. தீவுகளாய்க் கிடக்கிற தீக்குச்சிகளே, ஒன்றிணைந்து வாருங்கள்! தீ பரவட்டும், திக்கெட்டும் பரவட்டும்!

முனைவர் சுப. வீரபாண்டியன் ('இனி' இதழ் ஆசிரியர்)

இன்று வளர்ந்து கொண்டிருக்கிற தமிழ்க் குமுகம், முன்னால் வாழ்ந்து சென்றிருக்கிற மிகப் பலருக்கும் கடமைப்பட்டிருக்கிறது என்றாலும் நினைந்து நினைந்து, மறக்க முடியாமல் போற்றக்கூடிய பெரியவர்கள் இன்றைக்கு இரண்டு பேர். ஒருவர் தந்தை பெரியார்; மற்றொருவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். மொழியால்,

பண்பாட்டால் வல்லாண்மையாளர்களின் பிடிகளுக்குள் தமிழினம் சிதைந்து சீரழிந்து கொண்டிருப்பதைத் தூக்கி நிறுத்த இருவரும் போராடினார்கள். நான் ஐயா அவர்களோடு மிக நெருங்கிப் பழகாவிட்டாலும், திருச்சி சிறையில் பதினெட்டு நாள்கள் அவருடன் இருந்த சூழல் கிடைத்தது.

தனித்தமிழ் இயக்கமும், பகுத்தறிவு இயக்கமும், மார்க்சிய இயக்கமும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய எழுச்சியை, தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையை, பெண்ணிய விடுதலையை மேற்கொள்ள வேண்டிய கட்டம் இது. இச்சூழலில் திராவிடப் பொய்யைச் சொன்ன பெரியார் கன்னடர் என்றும், கோவை இராமக்கிருட்டிணன் தெலுங்கர் என்றும் கூறித் துண்டறிக்கை கொடுக்கின்றனர். இங்கு ஒன்றை அழுத்தமாய்க் குறிப்பிடுகிறேன். தந்தை பெரியார் இல்லாமலும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் இல்லாமலும் ஒரு நாளும் தமிழ்த் தேசிய விடுதலையைப் பெற்றெடுக்க முடியாது. திராவிடம் என்பது ஓர் அசைச் சொல்தான். திராவிடம் என்பது தமிழைத்தான் குறிக்கும். திராவிடம் என்று குறிக்கிறபோது தெலுங்கனை, கன்னடனை, மலையாளியை இழுத்து வைத்துக் கொண்டு யாரும் பேசவில்லை. அடித்து அடித்து உறுதியாகச் சொல்லுகிறேன் 'திராவிடர்' என்பது 'எதற்காகப் பயன்படுகிறது என்றால் 'பார்ப்பனரல்லாத தமிழர்' என்பதைச் சொல்லவே பயன்படுகிறது. திராவிடர் என்கிற அசைச் சொல் பார்ப்பனியத்துக்கு எதிரான எழுச்சியைக் காட்டவே பயன்படுகிறது.

புலவர் த.சுந்தரராசனார் (தலைவர் தலைநகர்த் தமிழ்ச்சங்கம்)

நான் ஐயாஅவர்களுடன் மிக நெருக்கமாகப் பழகாவிட்டாலும், இறுதி நாள்களில் அவர்களோடு நெருங்கிப் பழகுகிற வாய்ப்புக் கிட்டியவன் என மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவரின் இறுதிப் போராட்ட நிகழ்ச்சிகளில் தலைநகர்த் தமிழ்ச்சங்கம் அவருக்குத் தோள் கொடுத்ததையும், அவர் எங்களை வழி நடத்தியதையும் அனைவரும் நன்கு அறிவர்.

செயலலிதாவைப் பாடிய அறப்பாடலை எங்களிடம் காட்டியபோது "ஐயா, இவ்வளவு வலுவாக இருக்கிறார்களே இது நிறைவேறுமா என்றேன். மூன்று மாதம் அல்லது ஓராண்டு அல்லது மூன்றாண்டுக்குள் நிறைவேறும். முதலில் அவர்கள் ஆட்சியை இழந்து விடுவார்கள். ஆட்சியிழந்த நிலையில் வலுவிழந்து போய்விடுவர். அவர்களுக்கு இறப்பு நேராவிட்டாலும் இவையெல்லாம் உறுதியாய் நேரும்.

இன்றைய சூழலில் - ஐயா அவர்கள் குறிப்பிட்டது எந்த அளவு உண்மையாய்ப் போய்விட்டது என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

இன்றைக்குத் தமிழ் வழிக் கல்விக்குத் தெரிகிற சிறு வெளிச்சத்திற்கு முற்றிலும் காரணமானவர் ஐயா அவர்கள்தாம்.

அவரைப் போன்ற வீறுகொண்ட, கொள்கைப் பிடிப்பாளராக எந்தத் தமிழ்ப் புலவரையும் நாம் காண முடியவில்லை.

வழக்கறிஞர் பொ.வே.பக்தவத்சலம். (மக்கள் உரிமைக்கழகம்)

ஐயா அவர்கள் எம் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை உருவாக்கியவர்கள். இருபத்தைந்து ஆண்டுக் காலம் நான் பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபட்டவன்.

நாம் இந்து இல்லை, இந்தியன் இல்லை - என்று சாலைக்கு வந்து இயக்கப்படுத்தியவர்கள் ஐயா அவர்கள். தமிழின் விடுதலைக்காக நாம் வாழ வேண்டும். நான் பிறப்பால் தெலுங்கர் - என் துணைவியார் கன்னடத்துக்காரி. தமிழ்நாட்டில் உள்ள யாராக இருந்தாலும் சரி, தமிழன் என ஏற்றுக் கொள்ளத் தகுதி பெற்றவரைத் தமிழகம் தமிழன் என ஏற்றுக் கொள்ளும்.

அவரை இந்த அரசுதான் சிறையில் அடைத்து அணு அணுவாகக் கொன்றது. அத்தகைய அரசை, கட்டமைப்பை எதிர்த்துத் தமிழக விடுதலைக்காகப் போராடுவோம் என உறுதியேற்போம்.

முனைவர் ஆறு.அழகப்பனார்

இங்குக் கூடியுள்ளோர் ஐயா அவர்களுக்குக் கொடுத்துள்ள மதிப்பும், பெருமையும் போன்று, பல்கலைக்கழகங்கள் கொடுக்கவில்லை. தமிழ்நாட்டில் பன்னிரண்டு பல்கலைக்கழகங்கள் உள்ளன. அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் இருந்தபோதும், பிற இடங்களில் இருந்தபோதும் - நான் அவருக்கு என்னால் இயன்ற அளவு பெருமை செய்திருக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சிறப்பு பேராய்வாளர் என்கிற அடிப்படையில் ஐயா அவர்களை அழைத்தோம். அதே நேரத்தில் ஆளுநரும் பல்கலைக்கழகத்திற்கு வந்தார்கள். இரண்டு பேரும் வந்த நேரமும் மாலை 5.15 மணி. நான் ஐயா அவர்கள் கூட்டத்திற்கு வந்து விட்டேன். அங்கு நான் குறிப்பிட்டேன். “இப்போது நான் ஆளுநர் கூட்டத்திற்குப் போகாமல் இங்கு நான் வந்திருக்கிற போது எனக்கு என்ன உணர்வு ஏற்படுகிறது என்றால் தமிழகத்தின் குடியரசுத்

தலைவரையே வரவேற்கிற உணர்வே வந்த ு" - என்றேன். அதுபோல் சென்னை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஐயா அவர்களை அழைத்து 10-சொற்பொழிவுகளை நடத்தினேன்.

இதையெல்லாம் ஏன் குறிப்பிடுகிறேன் எனில் ஏனைய பல்கலைக் கழகங்களும் இதையெல்லாம் செய்யவேண்டும் என வலியுறுத்துகிறேன்.

ஐயா தம் பிறப்பை வரலாறாக்கினார்கள்.

ஐயாவின் பக்கமே திரும்பிப்பார்க்காத தாளிகைகள் -ஐயா அவர்களின் இறுதி ஊவலத்தைக் கண்டு அதிர்ந்து போய் எழுதின. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் எல்லாம் ஐயா அவர்களின் கொள்கை பரவ, தமிழ் வளரப் பெரும் பணியாற்றிட வேண்டும்.

பாவலர் சுரதா

சிறந்த எழுத்தாளராக, பாவலராக, சினமுள்ளவராகப் பெருஞ்சித்திரனார் இருந்திருக்கிறார். சேலம்தான் பெரும் இட மாற்றத்துக்குரிய இடம். அவர் ஒரு சேலத்துக்காரர், சினமுள்ளவர். அந்த சினம்தான் தேவை. ஒழுக்கமுள்ள நாடுதான் தேவை. என் இனிய நண்பர் பெருஞ்சித்திரனார் அவர்கள்.

அவருக்குக் கல்வெட்டு வைக்கவேண்டும். புத்தரின் ஒரே ஒரு பல் கிடைத்தது. அதற்கு 'புத்த கயா' அமைக்கிறார்கள். ஆனால் நமக்கு நாம் ஏதேனும் செய்கிறோமா, இந்த நூற்றாண்டின் கழக இலக்கியப் புலவராக வாழ்ந்திருக்கிறார் பெருஞ்சித்திரனார்.

பாவலர்க்கோ அப்துல் இரகுமான்

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களோடு ஒரு சில நிகழ்ச்சிகளில் கலந்திருக்கிறேன். தனிப்பட்ட முறையில்கூட ஒருமுறை சந்தித்துப் பேசியிருக்கிறேன். பாவலரேறுவை நினைக்கிற போதெல்லாம் என் மனக்கண்முன் கொழுந்து விட்டெரிகிற நெருப்பாகவே அவர் தெரிகின்றார். பலரின் வாழ்க்கை நெருப்பாய்த் தொடங்கிக் குளிர்ந்து கரியாகிப் போகும். பாவலரேறு அவர்கள் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து மேலும் மேலும் வெப்பமாயும், ஒளியாகவும், எரிந்து கொண்டே போனாரே தவிர, அணைந்ததாகவோ சாம்பலுக்குள் ஒளிந்து கனன்று கொண்டிருப்பதாகவோ நான் கண்டதே இல்லை.

காற்றுக்கே அணைந்து போகிற சிறு அகல் விளக்கல்ல அவர். புயலால் மிகுதிப்படுகிற பெருநெருப்பு அவர்.

தமிழகம் முழுமையும் எடுக்கப்படவேண்டிய நிகழ்ச்சி இது. ஒரு சிறிய ஊரிலே, சிறிய மண்டபத்திலே, சிறிய கூட்டத்தினரால் எடுக்கப்படுகிறது என்றால் தமிழகம் எப்படிக் கிடக்கிறது என்பதை நமக்கு காட்டிக் கொண்டிருக்கிறது.

தமிழர்களின் போலிப் பழம்பெருமையைப் பேசிக் கொண்டிருக்கவில்லை. தமிழரின் இன்றைய நோயை ஆராய்ந்து மருத்துவராக இருந்திருக்கின்றார். இந்த நோயாளி பிழைக்கமாட்டான் என நம்பிக்கை இழக்காமல் 'இருப்பினும் ஒரு கை பார்த்திடலாம்' என நம்பிக்கையுள்ளவராக, ஊட்டுபவராக இருந்திருக்கிறார்.

நிலம் என்று சொன்னால் நிலத்தின் பயிர் மொழி. நிலம் வளம் குன்றியிருக்குமானால் மொழியும் வளமிழந்து போகும். ஆங்கிலம் வளமுற்றிருப்பது அந்த மொழியைக் கொண்ட இனத்தினன் வலிமையினால்தான். எனவே என்றைக்கு மொழியைப் பேசுகிறவன் வலிமையானவனாகவும், பண்பாட்டின் உச்சிக்குச் செல்பவனாகவும் மாறுகிறானோ அப்போதுதான் அம் மொழி வளரும், தூய்மையுறும்.

தமிழன் எவ்வாறு வீழ்ந்தான் என்பதை முழுமையாய் ஆய்வு செய்யாவிட்டால் நாம் தமிழரை மீட்க முடியாது.

இங்கிருந்துள்ள பழம் சொல் வளங்களையெல்லாம் மற்றவர்கள் எடுத்துக் கொண்டு நம்மையே அடிமைப்படுத்துகின்றனர்.

வாழ்க்கையில் பல அரிய கலைச் சொற்கள் இவனிடம் உண்டு. அறிவியல் சொல் வளமும் அதிகம். வானியல் அறிவியலில் தமிழனின் சொற்கள் கொஞ்ச நஞ்சமா என்ன? மிக வியப்புக்குரியதாக உள்ளது இவனின் அறிவியல் அறிவு. ஆனால் இந்த அறிவெல்லாம், ஆக்கமெல் லாம் மதம் என்னும் சேற்றில் புதைந்து போனது. அதன் நோய்தான் இவனிடம் அதிகப்பட்டுப் போனது. தாழ்வு மனப்பான்மை இவனிடம் உள்ள இன்னொரு நோய். இத்தகைய நோய்களையெல்லாம் கண்டு இவற்றிலிருந்தெல்லாம் மீள்வது என்பது எப்படி எனக் கணக்கிட வேண்டும்.

வெறும் அரசியல் விடுதலை மட்டுமே போதாது. பிற அறிவுத் தளைகளிலிருந்தும், பண்பாட்டுத் தளைகளிலிருந்தும் நாம் விடுதலை பெற்றாக வேண்டும்.

பேராசிரியர் சச்சிதானந்தம்

நாங்கள் தமிழ்நாட்டுக்கு வந்தபோது யாரும் துணை நிற்காதபோது, துணை நிற்க அஞ்சியபோது பெருஞ்சித்திரனார் அவர்கள் துணிவோடு

துணைநின்றார்கள். இந்நாளில் ஈழத்தமிழர் சார்பில் ஐயா அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டவர்கள். நாங்கள் என்றென்றும் ஐயா அவர்களைப் பாராட்டுவோம், நினைந்து போற்றுவோம். அவர் எங்களுக்குக் கொடுத்த ஊக்கத்தையும், துணிவையும் என்றென்றும் எண்ணுவோம். எங்கள் விடுதலை பெற்ற நாட்டில் அவருக்குப் பல நடுகல் வைப்போம்.

அவரின் நினைவை ஈண்ணுவதோடு மட்டுமல்ல, அவர் ஊக்கப் படுத்திய செயல்பாடுகளில் நாங்கள் தொடர்ந்து செல்லலாமா, வேண்டாமா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும் எனச் சில கருத்துகளை முன்வைக்கிறேன்.

அங்கிருந்து வந்த கடிதங்கள் இரண்டைப் படிக்கிறேன். "இங்கிருந்து எந்தச் செய்திகளும் அங்கு எளிதில் வர இயலாது. தென் யாழ்ப் பாணம் முழுமையும் காடாக்கப்பட்டுள்ளது. எந்த அடிப்படை ஏந்தும் இல்லை. நாங்கள் எல்லாம் இருக்குமிடமின்றி அலைந்து தவிக்கிறோம். பலருடைய வீடுகள் தரைமட்டமாக்கப் பெற்றுள்ளன. பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன. உடுப்புகள், பொருள்கள் எதுவும் இல்லை. நாங்கள் எல்லாவற்றையும் இழந்து நிற்கிறோம்.

அங்கு ஆட்சிக்கு வருகிற கலைஞர் அவர்களைக் கட்டாயப்படுத்தி எங்களுக்கு உதவுங்கள்; இந்தியாவின் கூட்டரசையும் எங்களுக்கு உதவக் கூறுங்கள்.

தமிழக உடன்பிறப்புகள் கொடுத்த அரத்தக் கொடை,தொகை - இவை யாவும் எங்களை வந்தடையவில்லை". - இவையெல்லாம் ஒரு சோற்றுப்பதம். ஏழு இலக்கம் பேர் அல்லலுறுகிறார்கள். பெருஞ் சித்திரனார் இன்றிருந்தால் தெருவில் இறங்கிப் போராடுவார். அவர் பாதையில் செல்லுகிற நீங்கள் முழுமையாய்த் துணை நிற்க வேண்டும்.

சட்டமன்றத்தில் தமிழீழ மக்களின் படிநிகராளியாகவும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் தீரன் அவர்கள் இருக்க வேண்டும். இந்தக் காலத்திலாவது உரிமைபெற்ற தமிழீழம் பெற அனைவரும் துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பேரா ம.இலெ.தங்கப்பா

1955-ஆம் ஆண்டிலிருந்து பெருஞ்சித்திரனார் என் நினவுக்கு வருகிறார். பாரதிதாசனுக்குப் பிறகு அழகான பாடலை அவர் எழுதிய பாடல் வழி கண்டேன். 'தென்றலிலு'ம், 'வானம்பாடி'யிலும் 'துரை-மாணிக்கம்'-என்கிற பெயரில் எழுதிவந்தார்.

1959-இல் புதுவையில் அவரைப்பார்த்தேன். அவரைப் பார்க்கிறபோது அவர் உணர்வு முழுமையாய் நெருப்பாய் இருந்தார். 'தென்மொழி' வந்தது. அதன்பிறகு தொடர்புகள் கூடின. தென்மொழி இரண்டாண்டு தொய்வுற்றது. மீண்டும் கொண்டு வருவதற்கு அதிகமாகப் பேசினோம்.

பிறவியிலேயே ஒரு தனித் தன்மையுடன் பலரிடமும் காண இயலாத கூர்மையும், ஆழமும், அழுத்தமான உணர்வும் அவரிடம் இருந்தன. எதையும் திருந்தச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர். சிறிய செயலைக்கூட திருத்தமாகச் செய்யக்கூடியவராகவும், மற்றவர்களும் திருத்தமாகச் செய்ய வேண்டும் என்கிற எண்ணமுடையவராக இருக்க வேண்டும் என்று எண்ணியவர்.

ஒரு நொடிப் பொழுதையும் வீணாக்காமல் உழைக்க வேண்டும் என உழைத்தார். தமிழக உரிமைக்காக மட்டுமல்லாமல், வாழ்வியல் கருத்துகள், மெய்யியல் கருத்துகள் என எண்ணங்கள் ஊறுகிற ஊற்றாக அவர் இருந்தார்.

பலருக்கு அவர் கூறுகிற அறிவுரையும் நுட்பமானவை. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அந்தத் துறையில் சிறந்த முத்திரையைப்பதிப்பார். அன்பாகவும், எளிமையாகவும் பழகுகிற வகையில் அனைவரும் குடும்பமாக நாங்கள் வாழ்ந்திருக்கிறோம்.

தென்மொழியை இடைவிடாமல் நடத்துவதில் மிக உறுதி கொண்டிருந்தார். தென்மொழியை மொழியைக் கூறுகிற இதழாக மட்டுமல்லாமல் வாழ்வியல் வழிச் செய்திகள் கொண்ட இதழாகவும் கொண்டு வந்தார்.

எப்போதும் அவர் மேற்கொள்ளுகிற பணியிலிருந்து ஒரு நொடிகூட விடுபடாதவராகவே அவரை நான் கண்டேன்.

தமிழக விடுதலை இவற்றிற்கெல்லாம் ஓர் அடிப்படை ஒழுங்குணர்வு வேண்டும். அப்படியான தெளிவு இருந்தால்தான்-ஒழுக்கமிருந்தால்தான் நிறைவேற்ற முடியும்.

எதையும் தட்டிக் கேட்கிற உணர்வு அவரிடம் உண்டு. மிகத் துணிவானவர். மிகச் சிறிய செய்தியிலிருந்து கவனம் செலுத்துவார்.

அவருக்குச் சாவே இல்லை-என்று எண்ணியிருந்தேன். இவ்வளவு அழுத்தமாகவும், சுடரோடும் எரிந்த விளக்கு அணைந்திருக்க முடியாது, கூடாது என்றே என் உள்ளத்தில் எண்ண முடிகிறது.

அவர் விட்டுச் சென்ற பணியை விடாமல் எடுத்துச் செல்ல வேண்டும்.

ஐரோப்பாவில் உள்ள சிறிய விடுதலைப் போராட்டம்கூட பெரிய அளவில் காட்டப்படுகிறது. ஆனால் ஈழத்தின் பெரிய போராட்டம் கூட மறைக்கப்படுகிறது. தமிழரின் விடுதலைக்கான எழுச்சியை முன்னின்று நடத்துவதுதான் பெருஞ்சித்திரனாருக்கு நாம் செலுத்துகிற நினைவாக இருக்கும்

கோவை கு.இராமக்கிருட் 'டணன் (திராவிடர் கழகம்)

ஒருவர் மறைவுக்குப்பின் அவரின் புகழ் எந்த அளவு போற்றப்படுகிறதோ அதிலிருந்தே அவர் மதிக்கப்படுவார்.

பாவலரேறு ஐயா அவர்களோடு மிகப் பெரும் கூட்டம் அவரின் பின்னால் சென்றது. ஐயா அவர்களோடு அதிகம் பழகியது சிறையில் தான்.

தம் குடும்பத்தையே அவருடைய கொள்கைக்கு ஈடுபடுத்தியது, பெரிய வியப்பானது. வேறு எந்தத் தலைவரிடத்தும், அமைப்பிடத்திலும் பார்க்க முடியாது.

கம்பன் எக்சுபிரசு, பாண்டியன் எக்சுபிரசு என்பதைத் தொடர்வண்டி என எழுதச் சொன்னபோது 'இந்தியன் எக்சுபிரசை'-எப்படி எழுதச் சொல்லப்போகிறீர்கள்-என்று சூனியர் விகடன் பகடி செய்கிறான்.

பார்ப்பான் எந்த அளவு எதிர்ப்பட்டுப் போகிறான். இவற்றுக்கு எதிராக நாம் ஒற்றுமைப்பட வேண்டாமா? நமக்குள் பல கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் நமக்குள் ஒன்றுபட வேண்டாமா? இங்கு நம்மின் உணர்வு எப்படி உள்ளது. கோனார், இடையர் என்கிறபோது ஒன்றுபடாதவன் **'யாதவர்'** என்கிறபோது ஒன்றுபடுகிறான். ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்கிறபோது ஒன்றுபடாத தமிழன் **'தலித்'** - என்கிறபோது ஒன்றுபடுகிறான். இந்நிலை மாற வேண்டும். உணர்வு பெற வேண்டும்.

தியாகு (தமிழ்-தமிழர் இயக்கம்)

கனி மூன்று-மா, பலா, வாழை
தமிழ் மூன்று-இயல், இசை, கூத்து
பாவலரேறு கொண்ட உயிர் மூன்று - மொழி, இனம், நாடு -மூன்றும் தமிழ் - மொழி தமிழ், இனம் தமிழ், நாடு தமிழ்
இந்தியப் பொய்மை ஏனைய திரிபுகள் தீண்டியதில்லை அவர் மனம்.
அதில் அணுக்கருவறைக்கும் தமிழ் மனம்.

குறிமூன்று - மூன்றும் தனி.
தனித்தமிழ், தனித்தமிழ் நாடு, தனித்தமிழ் ஈழம்.
விடுதலை மூன்று-
தமிழ் விடுதலை, தமிழக விடுதலை, தமிழீழ விடுதலை.
பகை மூன்று-
பார்ப்பனியம், 'பாரதி'யம், 'காலனி'யம்.
பாவலரேறுவின் உலைக்களம் தந்த படைக்களம் மூன்று-
அயற்பகை வென்று நற்றமிழ் காக்கத் 'தென்மொழி'
உறைக்க உறைக்க உண்மை நடப்புகள் உரைக்கத் 'தமிழ்நிலம்'
இளம் தமிழ்ச்சூட்டில் அடைகாத்து அடைகாத்து நெருப்புக்
குஞ்சுகள் பொறித்துக் கொடுக்கத் 'தமிழ்ச்சிட்டு'
பாவலரேறு வாழ்நாள் முழுக்க உலவிக்கிடந்த இடம் மூன்று-
இல்லம்-நாடு-சிறைச்சாலை.
எங்கிருந்தாலும், என்ன செய்தாலும் உயிர் அதே மூன்று-
தமிழ்-தமிழர்-தமிழ்நாடு.

பெருஞ்சித்திரனார் குடும்ப அரசியல் நடத்தியிருக்கிறார். ஆனால் வழக்கத்திற்கு மாறான குடும்ப அரசியல். தந்தை சிறைப்பட்ட போதே மகனும் சிறைப்பட்டிருந்தார். பிறங்கடைகளாக மகன்-மகளை உருவாக்குவர். அவர் மக்களோடு மருமக்களையும் உருவாக்கியுள்ளார்.

அவர் ஒரு வெறும் தமிழறிஞர் மட்டும் அல்லர். தமிழ்ப் போராளியும் ஆவர். எதற்கும் அஞ்சாமல் நின்றவர் அவர். பல அடக்கு முறைக்கும் அஞ்சாது ஈழத்துக்கு ஆதரவாய்த் தாம் இருப்பதாகத் துணிந்து தனித்துக் கூறியவர்.

வெறும் உணர்ச்சி வயப்பட்டவர் அல்லர். ஆற்றொழுக்காய் அழுத்தமாய்ப் பேசக்கூடியவர். நெருக்கடி நிலைக் காலத்தில் தமிழக விடுதலைக்குச் சென்னைத் தெருவில் மாநாடு-ஊர்வலம் நடத்தியவர். யாருக்காகவும் தம்மை மாற்றிக்கொண்டவர் இல்லை.

சாதி ஒழிப்பைக் கடைபிடித்து ஒழுகிய திறலாளர் அவர். தம் மக்கள் அனைவருக்கும் கலப்புத் திருமணம் செய்துவைத்தவர்.

கூட்டத்தைக் கண்டு மயங்கியவர் அல்லர் அவர். தம்முடன் இருப்பவரைக் கூட்ட அளவில் அவர் எண்ணவில்லை, அது பயன் படாது என்பதை நன்கு உணர்ந்திருந்தார்.

எதையும் தமிழ்ப்படுத்திக் கூறவே செய்தார்.

அவர் ஒரு வரலாற்று மாந்தர், அவரின் வரலாற்றை எழுதினால் போதும் அதில் நாட்டின் வரலாறு இழையோடி நிற்கும்.

அவரைச் சிறைப்படுத்தின அனைத்து அரசும் அவரைச் சிறைப்படுத்திய சட்டம் - அனைத்துச் சட்டங்களுமே ஆகும். பாவலரேறு-அரசின் அடக்கு முறைகளைக் கண்டு மட்டும் அல்ல, பொது மக்களிடம் உள்ள காழ்ப்புணர்வுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும் கூட அஞ்சாமல் செயல்பட்டார். தம்முடைய பொதுவாழ்வில் ஒரே ஒரு முறைகூடப் பதவி நாற்காலியின் இளஞ்சூட்டிற்காக தம்மை விட்டுக் கொடுக்காதவர் பாவலரேறு.

96-இல் இன்றைக்கு ஓர் அமைச்சுத்துறை தமிழுக்காக வந்திருக்கிறதென்றால் பாவலரேறுவும் அவர்க்குப் பின்னால் வந்த நாமும் போராடியதன் விளைவேயாகும்.

'சன் டிவி'-யைப் 'பகலவன் தொலைக்காட்சி'- என்று மாற்றவேண்டுவதுதான் முதல்படியாக அவர்களிடம் இருக்கவேண்டும்.

ஒரு மொழிக் கொள்கையே உண்மைக் கொள்கை என்று கூறிக் கொள்கிறேன்; இம்மொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கை; மும்மொழிக் கொள்கை மோசடிக்கொள்கை என்று கூறிக் கொள்கிறேன்.

பேராசிரியர் தீரன் (தலைவர் - பாட்டாளி மக்கள் கட்சி)

ஐயா பாவலரேறு அவர்கள் மொழி, இனம், நாட்டிற்கு தம் உடல், பொருள், ஆவி, முழுமையாய்க் குடும்பத்தொடு ஈடுபடுத்தி எங்களுக்கெல்லாம் ஊக்கப்படுத்திச் சென்றுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்வதைவிட எனக்குப் பெரிய அலுவல் இருப்பதாக நான் எண்ணவில்லை.

ஐயா அவர்களின் பணியின் தொடர்ச்சியாய், நம்மாலோ, நாம் சார்ந்த இயக்கத்தாலோ செய்யமுடியாதா என்கிற ஏக்கத்தோடு இருக்கிறோம்.

கல்லூரிகளில் எங்களுக்கெல்லாம் அறிவுணர்வூட்டி வளர்த்த 'தென்மொழி' ஏடு. இன்றைக்கு மாணவர்கள் அப்படி இல்லை.

அன்றைக்கு மாணவர்கள் போராட்டங்கள் வீறு கொண்டிருந்தது என்றால் அதற்குத் 'தென்மொழி'யும், அவர்களின் தூய தொண்டும் காரணம் ஆகும். தமிழ்ப்பணிக்கு அமைச்சகம் அமைத்தால் மட்டும் போதாது இயக்கமாக்க வேண்டும்.

தமிழரை உண்மை உணர்வினராக்குகிற பணியாகத்தான் ஐயா அவர்களின் நிகழ்ச்சியைத் தமிழகம் முழுமையும் செய்ய வேண்டும் என்கிறோம்.

பா.ம.க.வின் சார்பில் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சியையும் தமிழகத்தில் செய்தல் வேண்டும் என்கிறோம்.

பாவேந்தர், பாவாணர், பாவலரேறு-என்கிற மூன்று 'பா'க்களையும் மனப்பாடமாகத் தமிழினம் என்றைக்கு ஏற்றுச் செய்கிறதோ அன்றைக்குத்தான் தமிழினம் முன்னேறும் என்கிறோம்.

இன்றைக்குப் பல்வேறு இந்தியக் கட்சிகளும்-தமிழக அளவில் வந்திருக்கின்றன. மாநில உணர்வுகள் வளர்கிறது. எனவே ஐயா அவர்களின் உணர்வுகளை - நாம் மதிக்க வேண்டிய - அவ்வுணர்வுகளை வலியுறுத்தவேண்டும்.

ஐயா அவர்களின் தமிழ் உணர்வுகளை வலியுறுத்தி - அவர்கள் இறுதியில்கூட தமிழுக்காக போராடினார்களே- அந்த வகையிலேயே அவரின் கொள்கையை வலியுறுத்தி நாம் போராடவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் 'பாவலரேறு தமிழ்க்களத்தை அரசே ஏற்று நடத்தி-நிறைவு செய்திட அரசை நான் சட்டமன்றத்திலே வலியுறுத்துவேன்' - என்று இந்நிகழ்ச்சியின் மூலம் வலியுறுத்திக் கூறுகிறேன்.

இறை. பொற்கொடி (நன்றியுரை)

நம் ஐயா அவர்களின் பணிகளை முழுமையாய் ஏற்றுச் செய்வது தான் நாம் ஐயா அவர்களுக்குச் செய்கிற நன்றியாகும்.

- பாவலரேறு ஐயா அவர்களின் அரிய படைப்பிலக்கியம்.
- செறிவுறு பாக்களொடு விரிவுறு விளக்கங்களையும் உடன் கொண்டது.
- செம்மையான பதிப்பு

நூறாசிரியம்

விலை : உரு : 100.00

பதிவஞ்சலில் பெறவிரும்புவோர்
உரு 115 (நூற்றுப்பதினைந்து மட்டும்) விடுக்க.

தொடர்புக்கு :

தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்
5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

செய்திகள்

பாவலரேறு ஐயாவின் முதலாண்டு நினைவு நாள்

பாவலரேறு ஐயா அவர்களின் முதலாண்டு நினைவு நாளான விடை 29 செவ்வாய் (11.6.96) அன்று சென்னை - மேடவாக்கம் பாவலரேறு தமிழ்க் கள வளாகத்திலுள்ள நினைவிடத்தில் தமிழன் பர்கள் கூடி ஐயா அவர்களை நினைவு கூர்ந்து செயலூக்கம் பெற்றனர். அன்னை தாமரையம்மையாரும் மற்றும் குடும்பத்தினரும், திருவாளர்கள் துரை. தென்னவன், அறிவுடைநம்பி, மா.செ. தமிழ்மணி வாழ்விணையர், குழந்தை நல்லிசையுடன் நற்றேவன் வாழ்விணையர், திருவாட்டி குணவழகி குடும்பத்தினர், வழக்கறிஞர் கலைமணி, .சரோசா அம்மையார், முனைவர் அரசேந்திரன், மேடவாக்கம் முத்துராமலிங்கம் குடும்பத்தினர், திருவள்ளுவர் மழலையர் பள்ளி ஆசிரியர்கள் செல்வியர் தமிழ்ச் செல்வி, மணிமேகலை, மற்றும் மகேசு வரி, கயல்விழி ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

புதுவையில் பாவலரேறு முதலாண்டு நினைவு நிகழ்வு

புதுவையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் முதலாண்டு நினைவு நிகழ்வு, கடந்த ஆடவை ஞாயிறு (23.6.96) அன்று, கம்பன் கலையரங்கில் நடைபெற்றது. பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துத் தமிழ்நாடு இளைஞர் பேரவையினர் முன்னின்று நிகழ்ச்சியை நடத்தினர்.

அன்று காலை 10 மணிக்கு முனைவர் இரா. திருமுருகன் தலைமையிலும், திருவாளர்கள் தந்தைப் பிரியன், இருதயராசு ஆகியோர் முன்னிலையிலும் தொடங்கிய நிகழ்ச்சியில் திரு. வை. வடிவேல் வரவேற்றுப் பேசினார். திரு. பறம்பை அறிவன் பாவலரேறு அவர்களின் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

பாவலரேறு கண்ட மொழி பற்றித் திருக்குறள் மணி இறைக் குருவனார் கருத்துரை நிகழ்த்தினார். முனைவர் ந. அரணமுறுவல் பாவலரேறு கண்ட இனம் பற்றியும் திரு. தியாகு ஈழம் பற்றியும் உரையாற்றினர். திரு. இரா. பாலு நன்றி நவின்றார்.

பிற்பகல் திரு. சீனு அரிமாப் பாண்டியன் தலைமையிலும் திரு. க. சுப்பையா முன்னிலையிலும் பாட்டரங்கம் நடைபெற்றது. முனைவர் கடவூர் மணிமாறன் தலைமையில் பாவலர் எழில்வாணன், புலவர் வெற்றிவேந்தன், திரு.குமர.தன்னொளியன், பாவலர் இலக்கியன், பாவலர் அன்புஆறுமுகம் ஆகியோர் பங்கேற்றனர்.

பாவலரேறு பாடற்கேற்ற சிறப்புறு ஓவியம் வரைந்தோர்க்குத் திரு.மூர்த்தி ஐயா பரிசு வழங்கினார்.

தொடர்ந்து பேரா. ம.இலெ. தங்கப்பா அவர்கள் தலைமையிலும் திருவாளர்கள் சுகுமாரன், மொழிச் செல்வன், சந்திரசேகரன் ஆகியோர்

முன்னிலையிலும் நடைபெற்ற நினைவரங்கில் புலவர் கலியபெருமாள், திரு. மா.செ. தமிழ்மணி, வழக்கறிஞர் சிவ. இராசேந்திரன், கி.வே.பொன்னையன், பாவலர் இளஞ்சித்திரன் ஆகியோர் உரையாற்றினர். திரு. கோ. சுகுமாரன் தலைமையிலும், திரு. வ.சு. சம்பந்தம், திரு. இரா. அழகிரி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற பொது அரங்கில் திரு. பழ.நெடுமாறன், பேரா.விருத்தாசலம், ஆகியோர் சிறப்புரையாற்றினர். திரு. இராம. சக்திவேல் நன்றி நவின்றார்.

ஒரு தெரிவிப்பு!

புதுவையில் கடந்த ஆடவை 9 ஞாயிறு (23.6.96) அன்று நடைபெற்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் முதலாண்டு நினைவு நிகழ்வில், உலகத் தமிழின முன்னேற்றக் கழக ஏற்பாட்டின்படி பாவலரேறு விருது என்ற ஒன்றை அன்னை தாமரைபெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வழங்க விருப்பதாகவும், அதனை அவர்கள் பெற்றுக் கொள்வதாகவும் அவர்களிடம் இசைவு பெறாமலே அழைப்பிதழில் அச்சிடப்பட்டிருந்தது. நிகழ்ச்சிக்கு வருகைதந்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு விழாக் குழுவின் சார்பில் வேண்டுகோட் கடிதம் ஒன்றும் அன்னையார் அவர்களுக்கு வந்தது.

ஆனால், உ.த.மு.க.விலிருந்து எவ்வகை அறிவிப்போ, வேண்டுகோளோ வரப் பெறாமையால் அன்னையார் அவர்கள் தாம் அதனைப் பெற்றுக் கொள்ள இயலாது என்று மறுத்தும், இசைவு பெறாமலே அழைப்பிதழில் பெயரை அச்சிட்டது முறையற்றது என்று சுட்டிக் காட்டியும், விழாச் சிறக்க வாழ்த்துத் தெரிவித்தும் 21.6.96 அன்று தனியார் (கூரியர்) அஞ்சல் வழி விழாக் குழுவினருக்குக் கடிதம் எழுதி அனுப்பி விட்டார்கள்.

நிகழ்ச்சியில் பங்கேற்கச் சென்றிருந்த புலவர் இறைக்குருவனாரிடம், அன்னையார் சார்பில் அவ்விருதைப் பெற்றுக் கொள்ளுமாறு விழா அமைப்பாளர் திரு. சுகுமாரன் வேண்டினாராக, அவர் அன்னையாரின் கருத்துங் கடிதமும் பற்றிக் கூறித் தாம் அவ்வேண்டுகோளை நிறைவேற்ற இயலாமைக்கு வருத்தந் தெரிவித்துத் தம் நிகழ்ச்சி முடிந்ததும் விழாக் குழுவினரிடம் விடை பெற்றுக்கொண்டார்.

இரு கிழமை கழித்துக் கடந்த ஆடவை 23 அன்று (7.7.96) பாவலர் இளஞ்சித்திரன் அன்னையார் அவர்கட்கு விடுத்த அஞ்சலட்டையொன்றில் புதுவை நிகழ்ச்சியில் அவ்விருதினை அன்னையாரிடம் சேர்க்கத் தாம் பெற்றுக் கொண்டதாகவும், அது தமது இல்லத்தில் இருப்பதாகவும், தாம் வர நேரம் வாய்க்கவில்லையென்றும் விரைவில் கொண்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அன்னையாரவர்கள் தம் கருத்தறியாமலும் இசைவுபெறாமலும் அவ் விருதினைப் பெற்றுக் கொண்டது பெருந்தவறென்று சுட்டிக் காட்டியும் அதனைக் கொண்டுவர வேண்டாவென்று மறுத்தும் பாவலர் இளஞ்சித்திரனுக்குக் கடிதம் வரையப்பட்டுள்ளது.

ஐயாவுக்கு ஓர் அஞ்சல்!

பெருமைக்குரிய எங்கள் உயிர் ஐயா, வணக்கம்! ஐயா! ஐயா! எங்கிருக்கிறீர்கள்? நீங்கள் இருப்பதாகவே நினைக்கிறோம்! ஆனால், இல்லாதது போல் தேடுகிறோம்! அதிர்ந்த நடைபோட்டன்று; தளர்ந்த நடையோடு, தேடும் நெஞ்சங்களுக்கெல்லாம் எட்டாத நிலையில் எங்கிருக்கின்றீர்கள்?

எல்லா இடமும் வெற்றிடமாக வெறுச்சோடிக் கிடக்கிறது ஐயா! எப்படி, ஏன் என்று விளக்கம் தெரியாத புயலில் சிக்கிய பஞ்சு போல் நிலைகுலைந்து நிற்கிறோம்!

கடந்த ஆண்டு சூன் ... ல் நடந்தவை உங்களுக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரிய வேண்டும்; கேட்க வேண்டும்.; கேட்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இதைச் சொல்கிறேன்.

இராமச்சந்திரா மருத்துவமனையில் உங்கள் படுக்கைக்கு எதிரில் உங்கள் விழிப்பை எதிர்பார்த்துக் கண்மூடாது காத்திருந்தோம். நீங்கள் கண்ணாடியால் மூடப்பட்ட அறையில் படுத்திருந்தீர்கள். நாங்கள் உள்ளே நுழைய முடியாத கட்டுப்பாடு நிறைந்த அவ்வறையில் ஒரு நொடி பார்க்க இசைவு உண்டு. அதில் தான் நாங்கள் கண்டோம் பாவலரேறு ஐயாவை... சொல்ல முடியாத காட்சியில்; நிலைகுலைந்தாடிய உடலோடு, இருக்கையில்.

அந்த நாள் ஞாயிறு விடியாது, கண்விழிக்காது என்ற செய்தியை இளைய மகன் பொழிலையழைத்து மருத்துவர் கூற... கண்ணில் குருதி சொட்ட... திறந்தவாய் மூடாத கதறிய நிலை கண்ட அம் மருத்துவமனை அலமந்து போய்விட்டது. தேன்மொழி சுருண்டுவிட்டாள். மருமகனார் அருளியார் எங்களைக் கதறாதீர்கள் என்றபடி மாடியிலிருந்து கீழே வெளியில் அழைத்துச் சென்றுவிட்டார்கள். ஐயா உங்களுக்குத் தெரியாது.

செய்தித் தீ பரவியது. வானொலி வழியும் தொலைக்காட்சி வழியும் செய்தியறிந்த தமிழக, ஈழத் தமிழ் மக்கள் கதறினார்களாம். அம்மா... என்றபடி பெரிய மகள் பொற்கொடி, பெரிய மருமகனார் இறை, இளையமகள் பிறை, இளைய மருமகனார் குணத்தொகை, மருமகள் கயற்கண்ணி, செல்லப் பெயர்த்தியர் இசைமொழி, கயல், பெயரன்மார் செம்மல், அறிவு, மொய்ம்பு, கதிர், தெள்ளி, நிறை, சுடர் எல்லோரையும் வாரியணைத்துக் கொண்டு உங்கள் பெரிய மகன் பூங்குன்று வந்து... எல்லோரும் கதறியதைப் பார்க்கவில்லையே என்றுதான் இதனை எழுதுகிறேன். குழந்தைகளை அழவிடக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறும் நீங்கள் அவர்கள் வாய் திறந்து கதறுவதை ஓராண்டு அடைத்து வைத்தும் இன்று வெடித்துவிடும் நிலையிலேயே மடல் வழித் தெரிவிக்கிறேன்.

எட்டு மணிக்குள் அமெரிக்காவுக்கும் செய்தித் தீ பரவி மருமகனார் அறிறைவனார், மகள் செந்தாழை, நீங்கள் செல்லமாக அழைக்கும் செந்தணல், யாழிசை யாவரின் நெஞ்சையும் சுட்டுப் பொசுக்க... உண்மையா? எப்படி...?' என்ற கதறலோடு, 'அம்மா வாய்விட்டுக் கூறட்டும்' என்று கூற... மறு தொலைபேசியில் நான் கேட்ட கதறல் உங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே எழுதுகிறேன்.

தமிழகத் தலைவர்களும் கலைஞர்களும் பேராசிரியப் பெருமக்களும் தென்மொழிக் குடும்பங்களும் எல்லா இயக்கத்தவர்களும் 'நாங்கள் தமிழர்கள்' என்று ஒன்றுபட்டு வந்து 'ஐயா, நீங்கள் எங்களைப் பாருங்கள் ஐயா என்று வேறுபாடின்றித் தமிழர்.. தமிழினம்' எனறு கூறிக் கதறியதை நீங்கள் கேட்கவில்லையே!

மருத்துவமனை வளாகத்தில் அன்று பறித்த வெள்ளை முளரி போன்று படுக்க வைத்திருந்த காட்சியை, அந்த அழகை, அறிவை, மொழி இன ஆர்ப்பட்டங்காத நெஞ்சை தமிழக ஈழ உரிமைப் போராட்ட மறவரின் தோற்றத்தை.. ஐயகோ எப்படி....!

- தாமரை பெருஞ்சித்திரனார்

பாவாணர் துணிவு

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ.சுப்பையா அவர்கள் வாய்ப்புக்கிட்டும் போதெல்லாம் மொழிஞாயிறு பாவாணர் அவர்களைக் கண்டு நீண்டநேரம் அளவளாவி வருவது வழக்கம். தாமரைச்செல்வர் அவர்கள் ஒருமுறை என்னையழைத்து முந்தையநாள் தாம் பாவாணர் அவர்களைக் கண்டுவந்தது பற்றிக் கூறினார். கூறிவிட்டு, பாவாணர் அவர்கள் தம் உள்ளக்கிடக்கைகள் சிலவற்றை வெளிப்படுத்தத் தயங்குவது போல் தெரிவதாகவும், அவர் அரசுப் பணியில் இருப்பதனால் அதற்கு இடையூறு வந்துவிடுமோ என்று அஞ்சி அவற்றை வெளிப்படுத்தாமலே விட்டுவிடுவாரானால் வேறு எவ்வகையிலும் எவரிடத்தும் அறியமுடியாத அரிய செய்திகள் பல மறைந்துபோய் விடக்கூடுமென்றும் கூறிக் கவன்றார். என்னையும் அக்கவலை பற்றியது. தாமரைச்செல்வர் அவர்கள் மேலுந் தொடர்ந்து "நான் அவ்வப்போது புலவரை அனுப்பிவைக்கிறேன். நீங்கள் சொல்ல நினைப்பதைச் சொல்லுங்கள்' என்று கூறியிருக்கிறேன். 'சரி' என்று இசைந்திருக்கிறார். நீர் கிழமைக்கு இரு முறையோ மும்முறையோ பாவாணரைச் சந்தித்து அவர் சொல்லுங் கருத்துகளைக் குறித்துக் கொண்டு வாரும். அவர் பெயரை வெளிப்படுத்தாமல் புனைபெயரில் வெளியிடலாம். அல்லது அவருடன் உரையாடியது குறித்த நிகழ்ச்சிக் கட்டுரையாக உம்முடைய பெயரிலேயே வெளியிட்டு விடலாம்" என்றார்.

மறுநாள் மாலை பாவாணர் என்னைக் கண்டவுடன் தாம் கருத்தூன் றியிருந்த செய்தி பற்றி மனக்கிளர்ச்சியுடன் மட மடவெனக் கூறிவிட்டு வழக்கம் போல் "அப்புறம்" என்றார்.

யான்: தாங்கள் வரச் சொன்னதாகத் தாமரைச் செல்வர் கூறினார் **ஐயா:** அப்படியா...! 'புலவரை அனுப்பி வைக்கிறேன்' என்றார். நீர் வந்துபோனால் நல்லது தானே என்று கருதிச் சரி என்றேன்.

யான்: தாங்கள் ஏதாவது கூறுவீர்கள் என்றும் அதை வைத்துக் கட்டுரை எழுதும்படியும் கூறினார் ஐயா!

ஐயா: 'நீங்கள் ஏதேனும் சொல்ல நினைத்தால் புலவரிடம் சொல்லி அனுப்புங் கள்' என்றார்; சரி என்றேன். கட்டுரை பற்றி யெல்லாம் அவருஞ் சொல் லவில்லை; நானும் இசையவில்லையே! பிறகு ஒருவாறு, தாமரைச் செல்வர் என்னிடங் கூறியவற்றை யெல்லாம் முழுமையாகக் கூறினேன். 'தயக்கம்', 'அச்சம்' என்பவற்றை இடையிடையே கேட்டவுடன் சற்றே மேல்நோக்கிய பார்வையுடன் கழுத்தை வெடுக்கு வெடுக்கெனத் திருப்பி அப்புறமும் இப்புறமும் பார்த்தார். பார்த்துவிட்டுக் கூறினார்.

"அதென்ன அப்படிச் சொல்லியிருக்கிறார்? உண்மை யென்று கண்டவற் றைச் சொல்வதற்கு நான் எந்தக் காலத்தில் தயங்கினேன்;

நான்தான் 'தமிழே திரவிடத்திற்குத் தாயும், ஆரியத்துக்கு மூலமும்' என்று அறுதியாகவும் உறுதியாகவும் சொல்கிறேனே! குமரிக் கண்டந்தான் மாந்தன் பிறந்தகம் என்று அறைகூவல் விட்டுக் கூறுகிறேனே! இதை விடத் துணிச்சாக வேறு எவன் சொல்வான்; எதைச் சொல்வான்?" இதையே வேறுவேறு வாய்பாட்டில் மீண்டும் மீண்டுங் கூறினார். இடையில் வேறுயாரோ வரவே பேச்சுத் திசைமாறியது.

பாவாணர் நோக்கில் மிகமிகத் துணிச்சலான செயலென்பது அச் சமின்மையின் உச்சநிலையாவது 'தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்துக்கு மூலமுமாம்' என்றும் குமரிக் கண்டமே மாந்தன் பிறந்தகம் என்றும் அடித்துச் சொல்வதுதான் என்னுந் தெளிவோடு ஐயா அவர்களிடம் விடைபெற்றேன்

- இறை

வினா-விடை

மந்திரியும் அரசனும்

**** 'மந்திரி' என்னுஞ் சொல்லைத் தென்மொழியில் பயன்படுத்தியிருக்கிறீர்களே, அது தமிழ்ச் சொல்லா?***

- தமிழ் முகிலன், திண்டிவனம்

☐ வடமொழியில் பெருவழக்குப் பெற்றுள்ள தமிழ்ச் சொற்களுள் மந்திரி என்பதும் ஒன்று. இது மந்திரம் என்னும் சொல்லினின்றும் தோன்றியது.

முன்னுதல் (கருதுதல்) என்னுஞ் சொல்லின் முதனிலையாகிய முன் மன் எனத் திரிய, அதனொடு திரம் என்னுஞ் சொல் சேர்ந்து மந்திரம் என்று ஆயிற்று. மன் + திரம் = மந்திரம்

எண்ணத்தின் திண்மையினால் எண்ணியவாறு நிறைவேறும் எண்ணம் அல்லது கூற்று அல்லது பாட்டு மந்திரமாம்.

மந்திரம் - சூழ்வினை, சூழ்வினைஞர் (மந்திரிமார்) அவை, கொண்முடிபு (சித்தாந்த) மந்திர நூல், சாவிப்புக் கூற்று எனப் பல பொருளில் வழங்கப்பெறுகின்றது.

அரசனுக்குச் சூழ்வினைத் துணையாயிருப்பவன் மந்திரி எனப்பட்டான் என்பது மொழிஞாயிறு பாவாணர் விளக்கம்.

மந்திரியை வடசொல் என்று கருதி விலக்க முற்பட்டவர்கள் அமைச்சன் என்னுஞ் சொல்லைப் பெருக வழங்கலாயினர். ஆனால் அதுவும் அமாத்ய என்னும் சமற்கிருச் சொல்லின் **திரிபே** என்று வடவர் கூறுவதை அவர் அறியார் போலும். எனினும் அமைச்சன் என்பது அரசியல் வினைகளைச் சூழ்ந்து அமைப்பவன் எனப் பொருள்படும் தமிழ்ச் சொல்லேயாம். அமை + சு = அமைச்சு - அமைச்சன்.

எண்ணி ஏடலுரைப்பவன் மந்திரியென்றும் எண்ணிச் செயற்படுபவன் - அமைச்சன் என்றுங் கொள்ளப்படும்.

**** ராஜமாணிக்கம் என்பதை இராசமாணிக்கம் என்னாமல் அரசமாணிக்கம் என்று மாற்றிவிட்டால் அது தமிழாகி விடாது. அரசன் என்பது தமிழன்று அது ராஜன் என்னும் சமற்கிருத சொல்லின் திரிபே என்று பேராசிரியர் ஒருவர் கூறுகின்றாரே?***

T. 5849

- தமிழன்பன், தஞ்சாவூர்

☐ உரவு என்பது வலிமையைக் குறிக்கும் சொல். உரவோன் வலிமை வாய்ந்தவன். உலகில் வலிமை மிக்கவன் அரசன் ஆதலின் உரவோன் என்னுஞ் சொல் சிறப்பாக அரசனைக் குறிக்கும். உம்பரம் அம்பரம் (அம்பாரம்) ஆனாற்போல உரவு அரவு எனத் திரிந்தது. அரவு - அரசு, அரசன் என்று ஆயிற்று. (ஒ.நோ. பரவு-பரசு) அரசன் என்னுஞ் தமிழ்ச் சொல்லையே வடவர் ராஜன் எனத் திரித்துக் கொண்டனர். இதனையறியாதார் ராஜனைத் தமிழொலிப்படுத்தி இராசன் என்னறனர். (ஒ.நோ. அரத்தம் - ரத்தம் - இரத்தம்)

- இறை

பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஐயா அவர்களின்
முதலாண்டு நினைவு நாள்
மற்றும்
நினைவு மலர் வெளியீடு



* தமிழறிஞர்கள், இனநலவுணர்வாளர்கள், நாட்டு விடுதலைப் போராளிகள் முதலான பலதுறைப் பெருமக்களிடமும் இருக்க வேண்டிய நலமிகு கருத்துக் களஞ்சியம்!

* இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் கட்டாயங் கைக்கொள்ள வேண்டிய அரும்பொருட் பெட்டகம்!

* பாவலரேறு அவர்களின் வாழ்க்கை வரலாறு, தென்மொழி வரலாறு, இளமைக்காலம் முதல் இறுதிவரை பல்வேறு தோற் றங்களில் ஒளிரும் ஐயா அவர்களின் ஒளிப்படங்கள், ஓவியங்கள், ஐயா அவர்களைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக்காட்டும் அரிய கட்டுரைகள், பாடல்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.



* தமிழக முதல்வர் கலைஞர், மருத்துவர் இராமதாசு, பழ.நெடுமாறன், கி.வீரமணி, வை.கோபாலசாமி, வே. ஆனைமுத்து, திருவாரூர் தங்கராசு, பேரா.சாலையார்.-சாலினியார், இலாரென்சு திலகர், அறிஞர் குணா, மருத்துவர் குருகுலமித்திரா, பெ.மணியரசன், தியாகு, இரா.திருமாவளவன், முனைவர் கா.பொ.இரத்தினம், பேரா.ம.இலெ. தங்கப்பா, முனைவர் ஆறு.அழகப்பன், பழ.கருப்பையா முதலானோர் எழுதியுள்ளனர்.

விலை உரு.*60.* பதிவஞ்சலில் பெற உரு.*75* அனுப்புக
'தென்மொழி நூல் வெளியீட்டு-விற்பனையகம்',
சென்னை-*600 005*